# பாலர் கல்வி

18 MAR 1941

தொகுதி 5 | 1941 ஞூ மார்ச் மீ விக்கிரம ஞூ பங்குனி மீ | பகுதி 12

## *ஞாபகசக்தி: அதன் அம்சங்களும் பயிற்சியும்

(Memory — Its Analysis and Training)

ஸ்ரீ M. S. ஸ்ரீநிவாஸ சர்மா, M. A.

V

வாழ்க்கையில் ஏற்படும் சகல தொழில்களுக்கும் அடிப்படையாயிருப்பது ஞாபகசக்தி. மாணவர்கள், வியாபாரிகள், வக்கீல்கள், ஆசிரியர்கள், வைத்தியர்கள் ஆகிய யாவரும் தம்தம் தொழில்களில் முன்னேற்றமடைவதற்காகத் தம் ஞாபக சக்தியை விருத்தி செய்துகொள்ள முற்படுகிறார்கள். ஞாபக சக்தி குன்றினால், அறிவு மங்கி, நம் தனித்தன்மை மறைந்து, கடைசியில் உன்மத்தர்களாகிவிட நேரிடும். ஞாபக நாசமும், ஞாபகக் கோளாறுகளும்தான் பைத்தியத்திற்கு முக்கிய காரணங்கள். பாவனா சக்திக்கும், நற்குண நல்லொழுக்கத்திற்கும், புத்தி கூர்மைக்கும் ஞாபகமே ஆதிகாரணம். பழைய அநுபவங்களுக்குக் களஞ்சியமாயிருக்கும் ஞாபகம், நமது விருப்பு வெறுப்புகளைத் தூண்டி, சுக துக்கங்களை உண்டாக்கி, அறிவு வளர்ச்சிக்கு அஸ்திவாரமாக அமைந்திருக்கிறது. பள்ளிக்கூடங்களில் நடக்கும் காரியங்கள் யாவும் ஞாபக சக்தியை விருத்திசெய்வதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. பரீக்ஷைகள் மாணவர்களின் ஞாபக சக்தியை அளக்கும் கருவியென்று சொல்லுகிறார்களல்லவா?

கற்றல் :—ஞாபக சக்தியின் அம்சங்கள் நான்கு. 1. (Learning) நினைப்பில் வைத்துக்கொள்வதற்காக அக்கரையுடன் கற்றல். 2. (Retention) கற்றவைகளை மறக்காமல் நினைப்பில் வைத்தல். 3. (Recall) மனத்தில் சேர்த்துவைத்த விஷயங்களை வேண்டும்போது துரிதமாய்

*திருச்சி அகில இந்திய ரேடியோவின் அநுமதியுடன் பிரசுரிக்கப்படுகிறது.

ஞாபகப்படுத்திக் கொள்ளுதல். 4. (Recognition) ஞாபகத்திற்குக் கொண்டுவந்த விஷயங்கள் சரியானவைதானு என்று நிச்சயித்துக் கொள்ளுதல். ஞாபகத்தின் பாகங்கள் நான்காக இருந்தபோதிலும், அதன் உயிர்நிலை முதல் அம்சமாகிறக் கற்றலில்தான் பொருந்தியிருக்கிறது. சிறத்தையோடும் விருப்பத்தோடும் கவனித்துக்கற்ற விஷயங்கள் தான் மனதில் தங்கியிருக்கும். அவைகள் தான் பிறகுதக்க சந்தர்ப்பங்களில், ஞாபகத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன. கற்காத விஷயங்களை எப்படி நினைப்பிற்குக் கொண்டுவரமுடியும்? சட்டியிலிருந்தால்தானே அகப்பையில் வரும்? ஆகவே, ஞாபக வளர்ச்சியின் ரஹஸ்யம் கற்றலின் திறமையில் அமைந்திருக்கிறது.

மனிதன் ஒரு கற்கும் பிராணி. பிறவி முதல் இறக்கும் வரையில் நாம் எல்லோரும் கற்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறோம். ஸங்கீதம் கற்கிறோம்; சைகிள் விடக் கற்கிறோம்; நீந்தக் கற்கிறோம்; கணக்குப்போடக் கற்கிறோம்; நாம் சாமர்த்தியத்தோடு செய்யும் எந்த காரியமும் கற்றலின் செய்கை என்று நாம் உணரவேண்டும். கற்குந்திறமை மனிதர்களுக்கும் உண்டு. மிருகங்களுக்கும் உண்டு. ஸர்க்கஸ்களில், சிங்கம், புலி, கரடி முதலியவைகள் செய்யும் அற்புத செய்கைகள் கற்றலின் பயனும்.

பழக்கம்:—கற்பதற்குக் குழந்தைப் பருவமே ஏற்றது. கற்றல் என்பது தேகத்தையும் அதன் நரம்பு தசை நார்களையும் நம் நோக்கங்களுக்குத் தக்கவாறு பழக்கும் அப்பியாசமாகும். அதனுல்தான் "இளமையிற்கல்" என்கிற பழமொழி வழங்குகிறது. பால்யம் தாண்டிவிட்டால் தேகவளர்ச்சி பரிபூரணமாகி நரம்புகளும் தசைகளும் முதிர்ச்சியடைந்து விடுகின்றன. அதன்பிறகு புதிதாகக் கற்றல் என்பது அசாத்தியம். ஆகவே நாம் நம் இளமைப் பருவத்தை வீணுக்காமல், வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய சகல வித்தைகளையும் பால்யத்திலேயே கற்றுப்பயிற்சி செய்துகொள்ளவேண்டும்.

நாம் முதன் முதலில் பிறர் சொல்வதைக் கேட்டும், செய்வதைப் பார்த்தும் கற்றுக்கொள்ள ஆரம்பிக்கிறோம். ஆனுல் நாம் மேலும் மேலும் செய்து பழகினுல் தான் எந்தவித்தையும் ஸாதகமாகும். ஸங்கீதத்திறமையை விரும்பினுல் பாடிப்பாடித்தான் அதில் ஸித்தியடைய முடியும். ஸைக்கில் விடக்கற்கவேண்டுமானுல், பலதடவை அதில் ஏறி விழுந்து, பழகித்தேறவேண்டும். செய்யாமலும், பல தடவை பழகாமலும் நாம் எந்த வித்தையையும் கற்கமுடியாது. ஆரம்பத்தில் தட்டித் தடுமாறித்தான் கற்கவேண்டும்; முதலில் முயற்சிகளும், தவறுகளும் நிரம்பியிருந்து, பிறகு அப்பியாசம் முதிர்ந்ததும், குறைந்து விடுகின்றன. நம் யத்தனங்களில் ஒரு தரமாவது ஜயம் பெற்று விட்டால், நமக்கு ஆனந்தம் பொங்கி, அதையே திருப்பித்திருப்பிக் குதூகலத்தோடு செய்யத்தூண்டப்படுவோம். காரிய ஸித்தியே கற்றலின் மர்மம். முயற்சி அவசியம் தான்; ஆனுல் தவறிப்போகும் கார்யங்களைப் பழகு

யம் வாய்த்தபோது பிறருடன் ஸம்வாதம் செய்து தெரிந்துகொள்ள வேண்டும். கற்கும்போது ஞாபகத்திலிறுத்தி வைக்கவேண்டுமென்கிற மன உறுதியுடனும் திடஸங்கல்பத்துடனும் ஆரம்பிக்க வேண்டும். எந்த விதத்தில் நினைவிற்குக் கொண்டுவர வேண்டியிருக்குமோ அந்த விதத்தில் கற்றுப் பழகவேண்டும். பிறகு, கற்றவைகளை அமைதியுடன் மனனம் செய்து, மனதிற்குள் சொல்லிப் பார்த்துக் கொள்ளவேண்டும். அவை களுக்குள்ளிருக்கும் காரண காரிய ஸம்பந்தங்களை ஊன்றிக் கவனிக்க வேண்டும். ஸாராம்சங்களை ஞாபகப்படுத்தி, எழுதிப் பார்க்கவேண்டும். கற்ற பாடங்களை அடிக்கடி நிதானமாக விமர்சனம் செய்யவேண்டும். இந்த முறையில் கற்றால், தைரியமும் தன்னம்பிக்கையு முண்டாக்கி, வேண்டியபோதெல்லாம் கற்றவைகளை ஞாபகத்திற்குக் கொண்டுவர சுலபமாக விருக்கும். மானஸ சாஸ்திர முறைப்படிக் கற்காவிடின், மனக்குழப்பமும், அதைரியமும், பீதியுமுண்டாகி, படித்தவை யாவும் வியர்த்தமாகிவிடும்.

**சரியான வழி**:—ஒரே மூச்சாக அதே பாடத்தை மணிக்கணக் கில் படிப்பது வீண். ஓய்வின்றி படித்தால், மூளை களைத்து, நரம்புகள் சோர்ந்துவிடும். அப்போது படித்தவைகள் மனதில் தங்கி நிற்க முடி யாது. ஆகவே நுட்ப அறிவோடு ஒரு தடவை படித்துவிட்டு, இரண்டு மூன்று நாள் கழித்து மறுபடி ஒருதரம் திருப்பிப்படிப்பது சரியான முறை. ஒரே நாளில் ஒழிவின்றி பத்துதரம் திருப்பித்திருப்பி படிப் பதைக் காட்டிலும், மூன்று நாளைக்கொருதரம் இரண்டு அல்லது மூன்று முறை படிப்பதுமேல். கற்க வேண்டிய விஷயம் பெரியதாயும் நீண்ட தாயுமிருந்தால் அதைச் சிறுசிறு பாகங்களாக வகுத்துக் கற்கிறோ மல்லவா? அது சரியான முறையன்று. உதாரணமாக ஆயிரம் வரிகளுள்ள செய்யுளை இருபது, முப்பது துண்டுகளாக்கி மனப்பாடம் செய்வதைக் காட்டிலும், செய்யுள் முழுவதையும் ஒரே தடவையில் அர்த்தத்துடன் ஊன்றிக் கவனித்துப் படித்து, நாலைந்து நாட்களுக் கொருதரம், இரண்டு மூன்று முறை பயில்வதே உத்தமம். சிறிது சிறிதாகப் படித்தால் முழுத் தாத்பர்யம் புலப்படாது; பரஸ்பர ஸம்பந்தம் உணர முடியாது; ஸ்வய நம்பிக்கை உண்டாகாது; மனோதைரியம் உதிக்காது.

கற்பது கடினமான தொழில். அதற்குக் குறுக்குவழி கிடை யாது. சிரமப்பட்டு ஊக்கத்துடன் உழைத்தால்தான் எதையும் கற்க இயலும். கற்றவைகளை அடிக்கடி அப்பியஸிக்காவிட்டால் அவை மறந்துவிடும். பரீக்ஷையில் எழுதும்போது நாம் கற்று மனத்தில் பதிய வைத்துள்ள விஷயங்களை ஞாபகப்படுத்திக்கொள்கிறோமல்லவா? அப் போது மன அமைதியும், தைரியமும், ஸந்தோஷமும் அவசியமாக வேண்டும். பயம் ஞாபகத்திற்குப் பெரிய சத்துரு. அதற்காகத்தான் அடிக்கடி பள்ளிக்கூட பரீக்ஷகளில் கலந்து, பயத்தைப் போக்கிக் கொள்ளவேண்டும்.

யம் வாய்த்தபோது பிறருடன் ஸம்வாதம் செய்து தெரிந்துகொள்ள வேண்டும். கற்கும்போது ஞாபகத்திலிருத்தி வைக்கவேண்டுமென்கிற மன உறுதியுடனும் திடஸங்கல்பத்துடனும் ஆரம்பிக்க வேண்டும். எந்த விதத்தில் நினைவிற்குக் கொண்டுவர வேண்டியிருக்குமோ அந்த விதத்தில் கற்றுப் பழகவேண்டும். பிறகு, கற்றவைகளை அமைதியுடன் மனனம் செய்து, மனதிற்குள் சொல்லிப் பார்த்துக் கொள்ளவேண்டும். அவைகளுக்குள்ளிருக்கும் காரண காரிய ஸம்பந்தங்களை ஊன்றிக் கவனிக்க வேண்டும். ஸாராம்சங்களை ஞாபகப்படுத்தி, எழுதிப் பார்க்கவேண்டும். கற்ற பாடங்களை அடிக்கடி நிதானமாக விமர்சனம் செய்யவேண்டும். இந்த முறையில் கற்ருல், தைரியமும் தன்னம்பிக்கையு முண்டாக்கி, வேண்டியபோதெல்லாம் கற்றவைகளை ஞாபகத்திற்குக் கொண்டுவர சுலபமாக விருக்கும். மானஸ சாஸ்திர முறைப்படிக் கற்காவிடின், மனக்குழப்பமும், அதைரியமும், பீதியுமுண்டாகி, படித்தவை யாவும் வியர்த்தமாகிவிடும்.

**சரியான வழி:**—ஒரே மூச்சாக அதே பாடத்தை மணிக்கணக்கில் படிப்பது வீண். ஓய்வின்றி படித்தால், மூளை களைத்து, நரம்புகள் சோர்ந்துவிடும். அப்போது படித்தவைகள் மனதில் தங்கி நிற்க முடியாது. ஆகவே நுட்ப அறிவோடு ஒரு தடவை படித்துவிட்டு, இரண்டு மூன்று நாள் கழித்து மறுபடி ஒருதரம் திருப்பிப்படிப்பது சரியான முறை. ஒரே நாளில் ஒழிவின்றி பத்துதரம் திருப்பித்திருப்பி படிப்பதைக் காட்டிலும், மூன்று நாளைக்கொருதரம் இரண்டு அல்லது மூன்று முறை படிப்பதுமேல். கற்க வேண்டிய விஷயம் பெரியதாயும் நீண்டதாயுமிருந்தால் அதைச் சிறுசிறு பாகங்களாக வகுத்துக் கற்கிருேமல்லவா? அது சரியான முறையன்று. உதாரணமாக ஆயிரம் வரிகளுள்ள செய்யுளை இருபது, முப்பது துண்டுகளாக்கி மனப்பாடம் செய்வதைக் காட்டிலும், செய்யுள் முழுவதையும் ஒரே தடவையில் அர்த்தத்துடன் ஊன்றிக் கவனித்துப் படித்து, நாலைந்து நாட்களுக்கொருதரம், இரண்டு மூன்று முறை பயில்வதே உத்தமம். சிறிது சிறிதாகப் படித்தால் முழுத் தாத்பர்யம் புலப்படாது; பரஸ்பர ஸம்பந்தம் உணர முடியாது; ஸ்வய நம்பிக்கை உண்டாகாது; மனேதைரியம் உதிக்காது.

கற்பது கடினமான தொழில். அதற்குக் குறுக்குவழி கிடையாது. சிரமப்பட்டு ஊக்கத்துடன் உழைத்தால்தான் எதையும் கற்க இயலும். கற்றவைகளை அடிக்கடி அப்பியஸிக்காவிட்டால் அவை மறந்துவிடும். பரீக்ஷையில் எழுதும்போது நாம் கற்று மனத்தில் பதிய வைத்துள்ள விஷயங்களை ஞாபகப்படுத்திக்கொள்கிருேமல்லவா? அப்போது மன அமைதியும், தைரியமும், ஸந்தோஷமும் அவசியமாக வேண்டும். பயம் ஞாபகத்திற்குப் பெரிய சத்துரு. அதற்காகத்தான் அடிக்கடி பள்ளிக்கூட பரீக்ஷைகளில் கலந்து, பயத்தைப் போக்கிக் கொள்ளவேண்டும்.

தேகசுகம் :—தேஹம் ஆரோக்கியமாக விருந்தால், ஞாபகச் சக்தியும் நல்ல நிலைமையிலிருக்கும். வியாதியால் பீடிக்கப்படுபவனுக்குப் புத்தி மழுங்கிப்போய், ஞாபகசக்தி குறைந்துவிடும். மேலும், கற்கும்போது மனத்தில் ஸந்தோஷ உணர்ச்சி நிரம்பியிருக்கவேண்டும். வருத்தத்தோடு கற்ற விஷயங்களும், துக்கானுபவங்களும் சீக்கிரத்தில் பிரக்ஞையிலிருந்து மறைந்துவிடும். இவைகளே பின்னிட்டு மனக்கோளாறுகளை உண்டாக்கி, நம்வாழ்க்கையைச் சின்னபின்னப் படுத்திவிடுகின்றன.

நாம் கற்றவைகளும், அனுபவித்தவைகளும் ஒன்றுவிடாமல் ஞாபகத்திலிருந்தால் நம் மனம் "குப்பைத் தொட்டி" போலாகிவிடும். பயனற்ற விஷயங்களும், விசனிக்கத்தக்க ஸம்பவங்களும் மனதைவிட்டு அகன்றால்தான் அறிவும் ஆனந்தமும் அதிகரிக்கும். துக்க அனுபவங்களை மறக்காமல் பொறாமை, துவேஷம், வெறுப்பு முதலிய குரோத எண்ணங்கள் வளர்ந்து, உன்மத்தம், பைத்தியம் முதலிய மன வியாதிகள் கிளம்பிவிடுகின்றன. மனம் ஸாம்ய நிலையிலிருந்து, வாழ்க்கை ஆனந்தமடைய வேண்டுமானால், மறதியும், ஞாபகமும் தக்க முறையில் தம் தொழில்களைப் புரிந்துவரப் பழக்கப்படவேண்டும்.

காபிக்கு எடுத்தது ★ ★




கணேஷ் காபி

பச்சையாகவும்

வறுத்ததாகவும்

பொடியாகவும்

முதல்தரமான காபி கிடைக்கும்

கணேஷ் & கம்பெனி

தம்புச் செட்டித் தெரு :: :: மதராஸ்

சில்லரை வியாபாரம்

285, சைனு பஜார் :: :: மதராஸ்

# கிராம ஆசிரியரும் கிராமக் கல்வியும்

**T. Ganapathy**, B. A., *Headmaster, S. S. K. V. Sala, Mukkudal,*
*(Tinnevelly District.)*

நவீன நாகரீகம் பூரண வளர்ச்சியெய்தி, முதுமைப் பருவமும் கடந்து, மடியுந் தறுவாயிலிருக்கும் இக்காலத்தில், நாகரீக வணங்கின் பிரதி பிம்பத்தைக் கண்டு காதல் கொள்ளும் நிலைமையிலிருக்கும் எண்ணிறந்த கிராமங்களின் கதியை என்னென்றுரைப்பது? தொழில் புரட்சி, வியாபாரப் புரட்சி, விவசாயப் புரட்சியாகிய உலகப் புரட்சிகள் இக்கிராமங்களில் ஊடேறு விடினும், அவற்றின் பயனாய் ஆங்கு நவீன பொருளாதாரப் புரட்சியே ஏற்பட்டுள்ளது. வறுமையும், அறியாமை யிருளும் சூழ்ந்த இக்கிராமங்களில் வஞ்சகப் பேய் தாண்டவமாடுவதில் என்னே வியப்பு.

வெளியுலக சம்பந்த மில்லாது, தத்தமக்குள் பூரண நிறைவு பெற்ற தனித் தொகுதிகளாய் விளங்கிய இக்கிராமங்களில் அமைதியை நிலை நாட்டுவதற்குச் சத்திய நெறி சிறந்த நெறியாகக் கொள்ளப்பட்டது. சத்தியத்தால் கட்டுப்பட்டு வாழ்ந்த இக்கிராமங்கள் சட்டத்தால் பிணைக்கப் பட்டிருக்கின்றன. சட்டத்தின் எல்லை அதிகமாக ஆக சட்டைத்தைப் பயன் படுத்தி சத்தியத்தை மீறி நடப்பாரின் அளவும் அதிகரித்து வரலாயிற்று. எல்லையில்லாச் சட்டங்களே கிராமங்களில் நடைபெறும் எண்ணிறந்த கொலைகளவுகளுக்குக் காரணமாயிருத்தல் வெளிப்படை. நீதி மன்றங்களில் தம் வழக்கை முறையிட்டு, சாக்ஷியம் கொடுத்து, நீதி பெறுவதற்குப் போதுமான பண வருவாயும், ஜன ஆதரவுமில்லாத ஏழை மக்கள் எல்லையில்லாச் சட்டங்களினால் யாதொரு பயனுமடைய முடியவில்லை. கிராமவாசிகள் தமக்குள்ள சச்சரவைத் தீர்த்துக் கொள்ள வெண்ணி அதிகாரிகளின் உதவியை நாடிச்சென்று, தம் பணத்தை வக்கீல்களுக்கும் குமாஸ்தாக்களுக்கும் பகிர்ந்து கொடுத்துவிட்டு வெறுங் கையோடு வீடு திரும்பும் கோலத்தைக் கண்ட அன்னவர் தம் அறியாமையை யுணர்ந்து, தம் அறியாமையைப் பயன்படுத்தி வயிறு பிழைத்து வரும் கற்ற வகுப்பாரின் மீது வெறுப்புறுதலும் வியப்போ?

பட்டத்தைப் பறக்கவிட்டு கிராமவாசிகளை ஏமாற்றித் திரியும் காலம் மலையேறி விட்டது. கற்றவகுப்பார் ஜன சமூகத்திற்குப் பாரமெனவும், ஜன சமுகத்தை ஏய்த்துப் பிழைக்கும் இழிந்தோரெனவும் கருதப்படும் காலம். கற்றவகுப்பார் தம் கல்வியைப் பயன் படுத்தி கிராமவாசிகளுக்கு நன்மை செய்ய முடியாதிருப்பதும் தவிர, தம் வயிற்றுப் பிழைப்புக்கே அரசாங்கத்தாரையும், தனவந்தர்களையும் நாடி நகரங்களுக்கோ, வெளி நாடுகளுக்கோ செல்ல வேண்டியதாயிற்று.

கிராமங்களில் தாண்டவமாடிய வறுமைப் பேய்க்கு அஞ்சி நகரங்களுக்கும் வெளி நாடுகளுக்கும் சென்ற இவ்வகுப்பாரை வேலையில்லாத் திண்டாட்ட மென்னும் பெரும் பேய் பின் பற்றலாயிற்று. தற்கால கற்ற வகுப்பாருக்கும், கல்லாதவருக்கும் வறுமை அதமப் பொது மடங்கே யெனினும், சிறிது காலத்திற்குள்ளாக அவ்வறுமை உத்தமப் பொது அளவாகப் பெருக விருக்கிறதென்பதில் சந்தேகமில்லை.

சகலவளமும் நிறையப்பெற்றதும், பண்படுத்தப்படாத பரந்த நிலப்பரப்பும், தோண்டப்படாத சிறந்த உலோகக்கனிகளும் கொண்ட கன்னி நாடாய் விளங்குவதுமான நம் நாட்டின் பொருளாதார கேந்திரஸ்தானங்களெனத்தகும் எட்டுலக்ஷம் கிராமங்களும் புத்துயிர் பெற்று எழுந்தாலன்றி நம் நாட்டினின்றும் வறுமைப் பேயகலா தென்பது திண்ணம். கல்விகற்றூர் உத்தியோக நெருப்பில் வீழ்ந்து மடியாவண்ணம், கல்வியறிவும் வெளியுலக ஆராய்ச்சியுமில்லாது பண்டை முறையில் ஊறிக்கிடக்கும் பாமரமக்களை வழிநடத்தும் தொழிலை மேற்கொள்ளுதல் நலம். கற்றவகுப்பார் ஜனசமூகத்திற்குப் பாரமென்று கருதப் படாமல், சமூகமுன்னேற்றப்படியிலேறிச் செல்வதற்கு ஆதாரமாகும் ஊன்றுகோல்களென மதிக்கப்படவேண்டும்.

கிராமங்கள்தோறும் கல்வியைப் பரப்புவதன் பொருட்டு உயர்தரக் கல்விகற்ற வகுப்பாரிற் பலர் எளிதில் முன்வருவார்களென எதிர்பார்க்கமுடியாது. போதுமான பண உதவியும், ஊக்கமு மில்லாது கற்ற வகுப்பார் கிராமத் தொண்டிலீடுபட்டு, கிராமங்களின் வறுமையை நீக்குவதற்கு எத்துணை உதவிதான் செய்ய முடியுமென்பது யாவரும் அறிந்த விஷயமே. தற்கால கல்வியின் மீது வெறுப்பும், தற்கால கல்விமான்களின் மீது பொறாமையும் கொண்டுள்ள கிராமவாசிகளிடம் இவர்களின் அறிவுரைக்கு நன்மதிப்பு இருக்க முடியாதென யாவரும் எதிர்பார்க்கலாம்.

தற்கால நிலைமையில் இத்தொழிலை ஒருவாறு மேற்கொள்ளுவதற்குப் போதிய வசதிபெற்றூர் கிராம ஆசிரியர்களே. கிராம ஆசிரியர்களின் நிலைமை பரிதபிக்கத் தக்கதாயிருக்கிற தென்பது உண்மையே. அரசாங்கத்தாரின் குழந்தைகளாகிய இவ்வாசிரியர்கள் சிற்றன்னையின் பராமரிப்பில் ஒப்படைக்கப் பட்டிருக்கிறூர்கள். சிற்றன்னையின் கட்டளையைச் செவ்வனே முடித்து தந்தையின் தயவைப் பெறவேண்டிய தாயில்லாக் குழந்தைகளின் நிலையிலிருக்கும் இவர்கள் சிற்றன்னையின் மனம் மாறுது நடந்துகொள்ள வேண்டியதே முதற்கடமை. கிராம ஆசிரியர்களுக்கும், கிராமப் பெற்றேர்களுக்கும் நேரான சம்பந்தமேற்பட வேண்டுமென்று அரசாங்கத்தாரே வலியுறுத்துகின்றனர். கட்டாய மணம், கட்டாயக்காதல் முதலியவற்றைப்போல் இக்கட்டாய சம்பந்தமும் கேலிக் கூத்தாயிருக்கிறதென்று மதித்து அச்சம்பந்தத்தைப் புறக்கணியாது, கல்வியறிவில்லாத நம் கிராம வாசிகளின் நல் வாழ்வைக்

கருதியேனும் அவர்களுக்குத் தொண்டு செய்வதன் பொருட்டு ஆசிரியர்களனைவரும் முன்வரவேண்டும்.

கல்வி போதிக்க முற்படுவோர், போதிக்கப்பட விருக்கும் கிராம வாசிகளின் அன்பும் ஆதரவும் பெற்றாலன்றி, அவர்கள் தம் முயற்சியி லீடேற முடியாது. கிராமவாசிகளோடு நெருங்கிப் பழகுவதாலோ, ஊர்விவகாரங்களில் தலையிட்டு மத்தியஸ்தம் கூறி ஊரின் நடு நாயகமாய் விளங்கவேண்டுமென்ற எண்ணங் கொள்வதோ பெருந்தவறாகும். பள்ளிச் சிறுவர்களே இவ்விரு பாலரையும் சேர்த்துவைக்கும் பாலமாயிருக்க வேண்டும். ஆசிரியர்கள் சிறுவர்களின் கல்வியில் ஆர்வமுடையவர் களாகக் காட்டி, சமயம் நேரும்போதெல்லாம் பெற்றோர்களிடம் பிள்ளை களின் தேர்ச்சியைப்பற்றித் தெரிவித்து வருவதால் நாளடைவில் இவர் களுக்குள் நெருங்கிய தொடர்பு ஏற்பட ஏதுவாகும். கல்வியதிகாரிகள் பாடசாலைகளைப் பார்வையிட விருக்கும் சமயம் பெற்றோர்களை யணுகி, அவர்கள் தம் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பவேண்டுமென்று கேட்டுக் கொள்வதோ, பள்ளி மாணவர்களில்லாத சிறுவர்களை அணிவகுத்து நிறுத்தி அதிகாரிகளுக்குக் காட்டுவதோ, ஆசிரியர்கள் தம் தொழிலுக்கு அபகீர்த்தியைத் தேடிக்கொள்வதோடன்றி, அதிகாரிகளிடமும் கிராம வாசிகளிடமும் தம் தொழிலின் ஏழ்மை நிலையைப் பகிரங்கப் படுத்திக் கொள்வது மாகும். அவ்வித இழி தொழிலை மேற்கொள்ளும் ஆசிரியர் கள் கிராமவாசிகளின் அன்பேயன்றி, மாணவர்களின் அன்பைப் பெறு வதும் அரிதாய் முடியும். அதிகாரிகள் பார்வையிட விருக்கும் சமயம், மாணவச் சிறுவர்களாகவே கூடிப்பேசி சத்தியாகிரகம் செய்து, அத் தகைய ஆசிரியர்களின் வயிற்றுப் பிழைப்பிற்கு உலைவைக்க ஏற்பாடு செய் வதும் வியப்பாகாது. பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை எக்காலமும் குறையாமலும், அவர்களின் கல்வியில் அபிவிருத்தி யேற்படவும், நாளடைவிலேயே உழைத்துவரும் ஆசிரியர்களைக் கிராமவாசிகள் விரும்பு வது மன்றி, அவர்களின் அறிவுரையைக் கேட்டு அதன்படி நடக்கவும் முன்வருவார்கள்.

திடீரென பாமர மக்களனைவரையும் ஒன்று திரட்டி ஓர் சங்க மேற் படுத்த முயல்வதும், தீர்மானங்களை நிறைவேற்ற எண்ணுவதும் எளிதில் முடியாத காரியங்களாகும். மானைக்காட்டி மானைப்பிடிப்பதுபோல, கிராமங்களிலுள்ள ஒரு சிறிது கற்ற வகுப்பாரைக் கொண்டே மற்றை யோரனைவரையும் வழிக்குக் கொண்டுவரவேண்டும். கற்ற வாலிபர்களிற் சிலரைத் தேர்ந்தெடுத்து, அவர்களும் பள்ளி மாணவர்களுமாக ஓர் நாடகம் நடத்த ஏற்பாடு செய்யலாம். சினிமா, டிராமா முதலான கண்காக்ஷிகள் பரவியுள்ள இக்காலத்தில் அவர்கள் நாடகங்கள் நடத்து வதில் அதிக உற்சாகம் காட்டுவர். ஓரளவு சங்கீத அறிவு படைத்த ஆசிரியர்கள் தம் சொந்த உழைப்பினால் எளிய நடையில் பாட்டுகளையும் வசனங்களையும் அமைத்து, கிராமாபி விருத்திக்கேற்ற நாடகங்களை

எழுதி முடித்து நடிக்கச் செய்தல் நலம். எழுத்துவாசனை யில்லாத ஒரு சிலருக்கு வாய்ப்படிப்பின் மூலம் சில பாட்டுகளையும் வசனங்களையும் கற்றுக்கொடுத்து நாடக பாத்திரங்களாக நடிக்கவும் ஏற்பாடு செய்ய லாம். இவ்வாறு சங்கீத உணர்ச்சியைத் தட்டியெழுப்புவதன் மூலம் கிராமவாசிகளுக்குக் கல்வியின் மீது பற்றுத லேற்படும்படி செய்வது சுலபமான முறை.

ஆசிரியர்கள் சமயம் நேரும்போதெல்லாம் கிராமவாசிகளிடம் சரசமாயும், விநயமாகவும் சிலசம்பாஷணைகள் நடத்துவதால், அவர் களின் அறிவை விசாலப் படுத்தலாம். நம் நாட்டு நிலைமையை மற்றைய நாடுகளின் நிலைமையோடு ஒப்பிட்டுக்காட்டி, அவர்கள் தத்தம் நிலை மையை யறிந்துகொள்ளும்படி செய்யவேண்டும். "காந்தி கறுப்பு மனு ஷரா, வெள்ளைக்காரரா" என்று கேட்கும் நிலைமையிலிருக்கும் கிராம வாசிகளைச் சீர்திருத்துவதற்கு சம்பாஷணையே யன்றி வேறு முறைகளை யனுஷ்டிக்க வியலாது. இவர்களுக்குப் பிரியமில்லாத ஓர் காரியத்தை எடுத்துச் சொல்லி அவர்களின் வெறுப்பைச் சம்பாதித்துக்கொள்ளக் கூடாது. ஓர் விஷயத்தை யறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலுடன் அவர்களாகவே ஆசிரியர்களை நாடிச் செல்லும் நிலைமையில் தம்மை வைத்துக்கொள்வதே ஆசிரியர்களின் புத்திசாலித்தனம்.

வெளியுலகின் போக்கை யறியவேண்டுமென்ற ஆர்வம் படைத்த கிராமவாசிகளுக்கு எண்ணும் எழுத்தும் கற்பித்தல் மிகவும் எளிது. அவர் களுக்குப் போதிக்கப்படும் கல்வி நவீனகல்வியினின்றும் முற்றிலும் வேறு பட்டிருத்தல் வேண்டும். சிறிய மாணவர்களுக்குக் கல்வி புகட்டுவதற்கும், முதியோர்களுக்குக் கல்வி போதிப்பதற்கும் அதிக வித்தியாச முண்டு. மூதியோர்களுக்கு விளையாட்டாகவோ, கட்டாயப்படுத்தியோ, கல்வி புகட்டமுடியாது. தாம் எழுத்து வாசனை யறியா திருத்தல் ஓர் பெருங் குறையென்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டாலொழிய, அவர்களைக் கல்வித் துறையில் திருப்ப முயல்வது வீண் பிரையாசையாகவே முடியும். ஆசிரியர்கள் தமக்குக் கிடைத்த ஓய்வு நேரங்களில், கல்விபெற விருக் கும் முதியோர்களைப் பாடசாலைக்கோ, அல்லது பொது சாவடி களுக்கோ வரும்படிசெய்து கற்றுக்கொடுத்து வரவேண்டும். தத்தம் பெயர்களை எழுதவும் அறியாதிருப்பவர்களுக்கு அப்பெயர்களை எழுதிக் கொடுத்து, அவற்றைப் பார்த்து எழுதிக் கற்றுக்கொள்ளும்படி செய்ய லாம். ஒவ்வொருவரும் "முதியோர் கல்வி கற்கும் முறை" என்ற புஸ் தகம் ஒன்று வாங்கும்படிசெய்து, அவற்றை அவர்கள் கற்றுக்கொள்வ தற்கு வேண்டிய அனுசரணை செய்யலாம். இவ்வாறு செய்வதில் ஆசிரி யர்கள் ஒவ்வொருவரும் சிறிதளவு முயற்சி யெடுத்தால் கிராமவாசிகள் பத்திரிகைகளை வாசித்தறியும் சக்தி பெறும்படி செய்யலாம்.

தற்போதய ஏழைக் கிராமவாசிகளிருக்கும் நிலையில் அவர்கள் விலையுயர்ந்த புஸ்தகங்களை வாங்குவதற்கும், அவற்றை வாசித்து அறிவ

தற்கும் போதிய நேரமும் வசதியும் கிடைப்பது அரிது. கிராமங்களி லுள்ள கற்ற வகுப்பார், கிராமப் பெரியார்கள் முதலியவர்களின் உதவியை நாடி, கிராமங்கள்தோறும் ஒரு செய்தித் தாளேனும் கிடைக்க ஏற்பாடு செய்தால் மிகவும் நன்மையாகும். ஆசிரியர்கள் முக்கிய செய்திகளைக் கிராமவாசிகளுக்கு எடுத்துக் கூறி, தற்கால உலகைப் பற்றி அவர்கள் கொண்டுள்ள தப் பெண்ணத்தை மாற்ற முயலவேண்டும். சிறிது காலத்துக்குள் அவற்றைத் தாமாகவே அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் அவர்களுக்கு எழுவதும் இயல்பே.

புத்துணர்ச்சி பெற்றெழுந்த கிராமவாசிகளை ஒன்றுகூட்டி ஓர் சங்க மேற்படுத்தலாம். மாணவர்களின் கல்வி யபிவிருத்திக் கென்ற ஒரே நோக்கத்துடன் கிராமங்களில் நிறுவப்பட்ட சங்கம் வெகுகாலம் நிலைத்திருக்க முடியாதென்பது அனுபவசித்தாந்தம். கிராம சுகாதாரம், தொழிலபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி முதலான உயரிய நோக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டிருத்தல்வேண்டும். கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்தி, அவற்றின் பலனைக்கிராமவாசிகள் பெறும்படிசெய்தல் நலம்.

ஆங்காங்கு ஆசிரிய சங்கங்களில் குறைந்தது அரைமணி நேரமேனும் உலக விவகாரங்களைப் பற்றிய சொற்பொழிவுகளும், தர்க்கங்களும் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். கிராமாபி விருத்திக்கான முறைகளை ஆசிரியர்கள் கலந்தாலோசித்து அனுபவத்திற்குக்கொண்டுவர வேண்டும். விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகளில் அவ்வப்போது கண்டு பிடித்து வெளியிடப்படும் அனுபவ சாத்தியமான விவசாய முறைகள், விவசாயக்கருவிகள், கைத்தொழிற்கருவிகள், நல்லமாசூல் தரும் விதைகள், பலவிதமான ஒட்டுமுறைகள் முதலியவற்றை ஆசிரியர்கள் அறிந்து கொள்ள ஏற்பாடு செய்து, அவர்களின் மூலமேனும் அச் செய்திகளைக் கிராமவாசிகளுக்குத் தெரியப்படுத்துதல் நலம்.

ஆசிரியர் ஒவ்வொருவரும் ஒரு செய்திக் களஞ்சியமாகவும், நடமாடும் புத்தகாலய மாகவும் விளங்கவேண்டும். இவ்வாறு கிராம ஆசிரியர்கள் தம் சுயமரியாதைக்குப் பங்கம் ஏற்படா வண்ணம் கிராமவாசிகளோடு ஒத்துழைத்து, அவர்களின் தொழிலுக்குப் பேருதவியாயிருப்பதுடன், அவர்களின் கல்வியுணர்ச்சியைத் தட்டி யெழுப்பும் தூண்டு கோல்களாயிருந்து, அவர்களுக்குத் தொண்டுசெய்ய முன் வருவாராயின், சிறிது காலத்துக்குள் நம் நாட்டின் கல்வியின்மையைப் போக்கலாம்.

நவீன கல்வியை அடிப்படையாகக் கொண்ட கட்டாயக் கல்வி, முதியோர் கல்வி முதலியவை சட்டத்தின் மூலம் அமுலுக்குக் கொண்டு வரப்படுவதாயினும், வறுமைக்கு மருந்தான கைத்தொழிலை ஆதாரமாகக் கொண்ட தொழிற்கல்வியை அரசாங்கத்தாரும் ஸ்தல ஸ்தாபனங்களும் ஆதரித்து, அக் கல்வியைக் கிராமங்கள் தோறும் பரப்புவதற்குப் பெருவாரியான ஏற்பாடு செய்தாலன்றி நம் நாட்டின் வறுமை நீங்காதென்பது திண்ணம்.

# ஓய்வுநேர வேலை

---

(**S. Sinnappan,** *Assistant R. C. Training School, Tindivanam.*)

ஒரு பாடசாலையின் வேலையையும் அங்கு கையாளப்படும் முறைகளின் பலனையும் அப்பாடசாலை பழைய மாணவர் தங்கள் ஓய்வு நேரத்தைக் கழிக்கும் விதத்திலிருந்து அறியலாம்.

வேலையற்ற கைகளைச் சாத்தான் தன் வேலைக்கு அமர்த்திக் கொள்ளும். வாசிக்கும் பாலர்களுக்கும் வேலைசெய்யும் வாலிபர்களுக்கும் ஓய்வு நேரம் உண்டு. உல்லாசமாகவும் உபயோகமாகவும் கழிக்கப்பட வேண்டிய இந்நேரங்கள், உபயோகமற்ற விதங்களிலும் தீய மார்க்கங்களிலும் கழிக்கப்படுகின்றன. இவர்களிடம் காணும் தீய பழக்கங்கள் ஓய்வு நேரங்களில் செய்யப் பழகினவைகளாகவே யிருக்கும்.

சிறுவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தை இவ்விதம் கழிப்பதைத் தவிர்க்க ஆசிரியர்கள் பெரிதும் உதவலாம். ஒவ்வொரு சிறுவனுக்கும் ஒவ்வொரு காரியத்தைச் செய்ய தனிப்பட்ட பிரியமுண்டு. இப்பிரீதியைப் பூர்த்தி செய்து பலனடைய ஓய்வு நேரம் தகுந்த நேரம். பிள்ளைகளோடு பழகும் ஆசிரியர் தம் வகுப்பில் பெரும்பாலான பிள்ளைகள் விரும்பும் சில காரியங்களைத் தெரிந்து அவற்றை ஓய்வு நேரங்களில் செய்யும்படித் தூண்டலாம்.

அறியாத காரியங்களில் யாரும் பிரீதி கொள்வதில்லை. ஓய்வு நேரங்களில் செய்யக்கூடிய வேலைகளைப் பற்றி பிள்ளைகளுடன் சம்பாஷிக்கலாம். செய்த பொருட்களைக் காட்டி உற்சாக முண்டாக்கலாம். பிள்ளைகள் செய்த வேலைகளுக்குச் சன்மானம் அளிக்கலாம். சில வேலைகளைச் செய்து காட்டலாம். பிள்ளைகள் செய்ய விரும்பும் காரியங்கள் நடக்கும் இடங்களுக்கு அழைத்துச்செல்லலாம். தெரிந்து கொள்ளும் இவ்வேலைகள் அதிக செலவில்லாததாகவும், கூடுமானவரையில் உபயோகமுள்ளதாகவும், இடத்திற்குப் பொருத்தமுள்ளதாகவும், கண்ணுக்கும் பிரியமுள்ளதாகவும் இருக்கவேண்டும். கண்ணுக்குப் பிரியமானதையே மனம் விரும்புகிறது.

ஓய்வு நேரவேலை இருவகைப்பட்டதாக ஒன்று கல்வி அறிவும், யோசனையும் வேண்டுவதாகவும், மற்றது சரீரப் பிரயாசை வேண்டுவதாகவும் பிரிவுபடும். ஒவ்வொரு பிள்ளையும் தன் சக்திக்கும் பிரியத்திற்கும்

தக்க வேலையைத் தெரிந்து கொள்ளுதல் அவசியம். பாடசம்பந்தமான பலவித படங்களைச் சேர்த்தல், பலவித புஷ்ப விதைகள், காய்கறி விதைகள் சேகரித்துப் பயிரிடல், பலவித கற்கள், இலைகள், சிப்பிகள் முதலானவைகளைச் சேகரித்து ஒழுங்காக்கி அறிவை விருத்திசெய்தல், தபால் பில்லைகள், வத்திப்பெட்டி படங்கள் சேகரித்தல், பலவித வர்ணப் படங்கள், போட்டோ படங்கள் சேகரித்தல், வர்ணம் தீட்டுதல், சித்திரம் வரைதல், போட்டோ பிடித்தல் இவைப் பிரயோசனமான வேலைகள். பாய் பின்னுதல், பலவிதமான கூடைகள் பின்னுதல், நூல் நூற்றல், சோப்பு செய்தல் போன்ற வேலைகள் நல்ல காலப் போக்கு. தேனீ, பட்டுப்பூச்சி, புறு, கோழி, இவை வளர்த்தல் பிரியமான வேலைகள். தையல், பின்னல், வர்ணக்காகிதங்களாலும் மணிகளாலும் அலங்கார வேலைகள், பூச்செண்டுகள், பொம்மைகள் செய்தல் சங்கீதம் கற்றல் பெண்களுக்குப் பிரியமாக இருக்கும். இவ்வாறுன ஓய்வுநேர வேலைகள் பல பலருக்கும் தோன்றும்.

வகுப்பில் கெட்டிக்காரப் பிள்ளைகள் அறிவை விருத்திசெய்யும் வேலைகளைச் செய்யலாம். கதை, வியாசம் நாடகம் முதலானவை எழுதப் பழகலாம். பத்திரிகைகளிலிருந்தும் புத்தகங்களிலிருந்தும் இவற்றைச் சேகரிக்கலாம். பாடலில் பிரியமுள்ளவர்கள் பலவித செய்யுள்களையும், பாடல்களையும், பழமொழிகளையும் சேகரிக்கலாம். தாமும் ஆசிரியரின் உதவியுடன் இவற்றை இயற்றலாம். இவர்கள் பாடசாலையின் புத்தகாலயத்தைப் பெரிதும் பயன் படுத்தலாம். நல்ல புத்தகங்களை வாசிப்பது ஓய்வு நேரத்தை உல்லாசமாகவும், உபயோகமாகவும் கழிக்கும் ஓர் உத்தம வழக்கம். அரிய புத்தகம் மனந்தளரா நண்பன். துற்பழக்கங்களை நற்பழக்கங்களால் போக்குவோம். ஓய்வு நேரவேலைகளை ஓங்கச் செய்வோம்.

# தீவினை யகற்று

—

(V. N. கிருஷ்ணசாமி, ஆசிரியர், செங்குந்தர் பாடசாலை, துறையூர்.)

1. கடவுளைக் கண்ணினால் கண்டவராரென்று
   கபடங்கள் புரியாதே—பாலா நீ
   கபடங்கள் புரியாதே—உலகை நீ
   கடக்கும் போதினில் காலன் கோபங்கொள்வான்
   கடவுளை மறவாதே. (கடவுளை)

2. உண்மைப் பக்தனென்று வேடம் தரித்து நீ
   உலகோரை மயக்காதே—பாலா நீ
   உலகோரை மயக்காதே—இதை
   உண்மையாகச் சொன்னேன் உற்றிடுவாய் அல்லல்
   உண்மையைப் பொய்க்காதே. (கடவுளை)

3. சிந்தித்தொருகாரியம் செய்தபின் என்றும் நீ
   சிந்தைமயங்காதே—பலர்சொல்லால்
   சிந்தைமயங்காதே—அதனால்
   சிந்தைநோகும் வெறும் நிந்தைவந்து சேரும்
   நியாயமும் ஆகாதே. (கடவுளை)

4. தெய்வம் அறியாதென்று தீவினைசெய்தால் நீ
   உய்யும்வழி இழப்பாய்—பாலா நீ
   உய்யும்வழி இழப்பாய்—இதை
   மெய்யாகவே சொன்னேன் ஐயங்கொள்ளாதே நீ
   மேன்மையைத் தானிழைப்பாய். (கடவுளை)

# முதியோர் கல்வி - அதன் விசேஷம்

(வி. ஜய்ராமன், B.A., L.T., விழுப்புரம்.)

## 1. கல்வியின் பெருமை - முதோர் மொழிகள்

கல்வியின் ஏற்றத்தைக் குறிக்கும் பெரியோர்களது வசனங்கள் பல நமது தமிழ் இலக்கியத்தில் உள. ஓர் தமிழ் வெண்பா "கல்வியின் ஊங்கில்லை சிற்றுயிர்க்கு உற்றதுணை" என முடிவு பெறுகிறது. "ஈட்டிய பொருளினும் எழுத்தே உடைமை" என்னும் தமிழ் பழமொழி ஒன்று, கல்வி, மற்ற பொருளுக் கெல்லாம் மேம் பட்டதென வற்புறுத்துகிறது. எனவே, மற்றோர் வெண்பா கூறுவதுபோல "கற்கை நன்றே, கற்கை நன்றே".

## 2. கல்வியின் அவசியம் - ஆங்கில ராஜகுமாரரின் அனுபவம்

இதன் அவசியத்தை ஓர் இங்கிலாந்துதேச மன்னர் அனுபவ பூர்வமாக அறிந்தார். இவர் ஆரும் எட்வர்ட் என்னும் அரசர். இவர் சிறு பிராயத்தில் ஒரு நாள் ஓர் ஏழ்மை சிறுவனைப் பார்த்ததும், தன் ஆடையை அவனுக்குக் கழற்றிக் கொடுத்து அவன் உடுப்பைதான் அணிந்து கொண்டார். இப்புதிய, எளிய கோலத்துடன் பல தெருவுகளில் சென்று கொண்டிருந்தார். பகலும் மறையும் காலமாயிற்று. கால் சோர்வடைந்தார். மேலும், திரும்பும்வழி தெரியாது திகைக்கவும் நேர்ந்தது.

அச்சமயம், அத்தெருவில் ஒரு பெரிய கட்டடம் தன் கண்முன் தோன்றிற்று. அது திக்கற்ற எளிய குழந்தைகளின் விடுதியாகும்; அதை ஏற்படுத்தியவர் இவர் தந்தையாரே. எனவே, அங்கு சென்றால் தனக்கு நல்வரவேற்பு ஏற்படும், களை தீரும், வீடும் அடையலாம், என எண்ணலானார். அவர் அங்கு வந்து சேர்ந்த நேரம் விளையாடும் காலம். பிள்ளைகள் விளையாட்டில் சந்தோஷித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்து இளவரசர் வந்திருப்பதாகவும், அவ்விடுதியின் தலைவரைத் தான் பார்க்கப் பிரியப்படுவதாகவும் சொல்லிவர உத்திரவிட்டார். அவர்கள் இவரது உடுப்பை பார்த்து இவர் வார்த்தைகளை நம்பாது ஏளனம் செய்தார்கள். எட்வர்டு கோபம் கொண்டு அருகாமையிலிருந்த பையனை காலால் உதைத்தார். உடனே அனைவரும் இவரைச் சூழ்ந்து கொண்டார்கள். கடுமையாகப் பேசினார்கள். அவர் மேல் நாய்களை ஏவித் தொந்திரவு செய்தார்கள். வீதியில் துரத்தினார்கள்.

மிகச் சிரமத்துடன் நடந்து செல்லும்பொழுது, ஏழ்மை சிறுவர்களின் கேவலமான நடத்தை கௌரவமற்ற செயல்கள், அடிக்கடி தன் மன நினைவில் எழுந்தன. அத்துடன் ஒரு யோசனையும் தோன்றியது தான் அரசபதவியடைந்ததும் அப்பிள்ளைகளை உண்மையாக நல் வழிப்படுத்த வேண்டுமென்பதே. அவர் தீர்மானித்ததாவது, "அவர்கள் உணவு, உடை பெறுவதுடன், புஸ்தகப் படிப்பும் அடையவேண்டும். இருதயம், மூளை இவைகள் வளர்ச்சி பெறுது, வயிறு வளர்க்கச் செய்வது வீணே" இதையல்லவோ நமது கவி ஒருவர் தனது செய்யுளில் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

"இடைவனப்பும், தோள்வனப்பும், ஈடின்வனப்பும்
நடைவனப்பும், நாணின்வனப்பும்,—புடைசால்
கழுத்தின் வனப்பும், வனப்பு அல்ல:—எண்ணோடு
எழுத்தின் வனப்பே வனப்பு."

## 3. நம் நாட்டின் கல்வி நிலைமை

இத்தகைய பெருமைபெற்ற கல்வி நம் நாட்டில் எந்நிலையிலிருந்து வருகிறதென நாம் ஈண்டு கவனிக்கற்பாலது. பொதுவாகக் குறிப்பிடின், நூற்றுக்குப் பதின்மர் எழுத்தறிவு பெற்றவர்களாக இருக்கிறார்கள். மற்ற நாடுகளிலோ அவ்வாறல்ல. உதாரணமாக கீழ் நாடான ஜப்பானிலும் சரி, நம்மை அரசியல் புரியும் ஆங்கிலேயர் தாய்நாடும் மேல்நாடுமாகிய இங்கிலாந்திலும் சரி, 80 சதவிகிதங்களுக்கு மேலாகவே ஜனங்கள் எழுதப்படிக்க அறிந்து இருக்கிறார்கள்.

## 4. அரசாங்கத்தார் உணர்ச்சி 1920 சட்டம்

இக்குறைவை அரசாங்கத்தார் உணராதில்லை. 1920-ம் வருஷத்தில், செம்ஸ்போர்ட் சட்டப்படி அமையப்பெற்ற இரட்டை ஆட்சி முறையில் கல்வி இலாகா ஜனநாயக தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவ்வருஷத்திலேயே நமது மந்திரி ஆரம்பக் கல்விச்சட்டம் ஒன்று இயற்று வித்தார். இது கட்டாயக்கல்வி ஏற்படுத்தலையே நோக்கமாயுள்ளது. ஆனால் பல காரணங்களினால் இது இன்னும் பூரணமாக அமையவில்லை.

## 5. கல்வி இலாகா அத்யக்ஷகர்கள் சீர்திருத்தம்

இதனிடையே, கல்வி இலாகா அத்யக்ஷகர்கள் இருவர் ஸ்ரீமான் சாம்பியன், ஸ்டேதம் என்பவர்கள் தற்கால கல்வியின் முறைகளை பரிசீலனை செய்து அவைகளின் குறைகளை நீக்கவும் முயற்சி கொண்டார்கள். இன்று அமைந்து இருக்கும் பள்ளிக்கூடங்கள், பள்ளியில் பயிலச் சேரும் மாணவர்களுக்கு பூரா எழுத்தறிவை ஏற்படச் செய்வதாக இல்லை. பிள்ளைகள் ஐந்து வகுப்பு முடியவும் படியாது நின்று விடுகிறார்கள். இது ஒரு பெருங்குறையாகும். ஐந்து வகுப்புகள் தொடர்ந்து

படித்தவர்கள்தான் எழுத்தறிவாளர்கள் என கருதப்படுகின்றனர். இக் குறைதான் சேதம் என்று குறிப்பிடப்படுகிறது. இதை நீக்கவே கல்வி இலாகா உழைத்து வருகிறது. ஒரு வாத்தியார் பள்ளிக்கூடங்கள் நீக்கப் படுகின்றன. ஐந்து வகுப்புப் பள்ளிக்கூடங்களாக எல்லா பள்ளிக் கூடங்களும் மாற்றப்பட்டு வருகின்றன. இச் சீர்திருத்தம் பள்ளிக்கு வரும் பிள்ளைகளை எழுத்தறிவாளர்களாக செய்கின்றன.

## 5. கட்டாயக் கல்விக்கு முதியோர் கல்வி பேராதரவானது

மற்றவர்களை எவ்வாறு இக் கூட்டத்தில் சேர்ப்பது? வெகுவாக கிராமங்களில் இவ்விரு தொகுதியும் சரிவர சமமாகவேயிருக்கும். ஆகவேதான் கட்டாயக்கல்வி வேண்டுமென்று முறையீடு இருந்து வரு கிறது. எனினும், இது இன்னும் அமையாததற்கு பல காரணங்கள் உண்டு. பெற்ரோர்களின் ஏழ்மையும் படிப்பின்மையுமே முக்கியமான தெனக் கொள்ள வேண்டும். படிப்பின்மை விலக்கப்படின் ஏழ்மையின் தடையும் தானே நீங்கும். குடியானவர்களின் இயல்பு தங்களை பட்டினி கிடத்தியும், பிள்ளைகளை வளர்ப்பதே. அவ்வாறு தாங்கள் சிறிதளவு அதிகமாக உழைத்து தங்கள் குழந்தைகளின் வேலையை விரும்பாது பள்ளியில் சேர்க்கவும், வைத்திருக்கவும் கூடும். சில வருஷங்களாக நம் நாட்டினரிடையே பிள்ளைகளுக்கு படிப்பு சொல்லிக்கொடுக்க வேண்டு மென் எண்ணம் வளர்ந்து வருகிறது. இது செயலளவில் பயன் படுவ தற்கு, கல்வியறிவுயில்லாத பெற்ரோர்களுக்கு படிப்பு சொல்லி கொடுப் பதே பெரும் சாதகமாகும். எழுத்தறிவு பெற்ற பெரியோர்கள் பிள்ளை களைப் பள்ளிகூடத்தில் சேர்க்கவும், சேர்த்தவர்களை அடிக்கடி பள்ளியி னின்று நீக்காமலும் இருப்பதற்கு, தங்களது படிப்பே மிகவும் தூண்டுதலா யிருக்கும். அப்பொழுது கட்டாயக் கல்விச் சட்டமும் வேண்டுவதில்லை. தேக்கம் தேய்வு என குறைவுகளும் நமது பள்ளிகளிலிருந்து மறைந்து நிற்கும்.

இக்குறை நிற்க, மற்ரோர் சிதைவும் காணப்பட்டது. இது பள் ளியினின்று நீங்கி வாழ்க்கை சமூகத்தில் சேர்ந்தவர்களைப் பொருத்த தாகும். இவர்கள் நாளடைவில் சிறிதளவு கற்றுள்ள கல்வியையும் மறந்துவிடுகிறார்கள். இவர்களையும் எழுத்தறிவு இல்லாத கூட்டத்தார களுடன் சேர்க்கப்படவேண்டி யிருக்கிறது. இது பல விதத்திலும் பாதகமாக கருதப்பட வேண்டும். படித்தவர்களது தொகை உயர்வு படாது நிற்கிறது. இவர்களைப் பொருத்தவரையில், கற்றதை மறக் காமல் இருக்கச் செய்வது அவசியமில்லையா? அதற்காக வேண்டிய சாத கங்களைத் தேடிக் கொடுப்பதும் அவசியமாகும். வாசகசாலை அமைப் பும், பொது அறிவு பிரசங்கங்களும், புஸ்தகநிலையம் நிறுவச் செய்வதும் இதற்கென்ற சில சாதனங்களாகும். இவைகளை ஏற்படுத்திக் கொடுப் பது முதியோர் கல்வி திட்டத்தின் கீழ் கவனிக்கற்பாலது.

## 7. முதியோர் கல்வியின் முப்பயன்கள்

இவ்விரிவான முதியோர் கல்வித் திட்டம் பல பயன்களைப் பயக்கக்கூடியது. கல்வியை பரவச் செய்வது ஒன்று. யாவரும் எழுதப் படிக்க அறிந்தவர்களாக யிருந்தால் நாட்டின் ஜனநாயக லக்ஷியம் கைகூடி வரும். நம் மாகாணத்தில் எழுத்தறிவாளர்களெல்லாம் வாக்களிக்கும் உரிமை பெற்றிருக்கிறார்கள். வயது வந்தவர்கள் அனைவரும் எழுதப்படிக்கத் தெரிந்துகொண்டிருந்தால் ஜனநாயக ராஜீய அமைப்பின் பல அங்கங்களும், உண்மையான பொதுஜன பூரண பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக விருக்கும். இது மற்றோர் விசேஷம் அல்லவா?

மேலும், சமூக வாழ்க்கையும் உயர்வுபடும். இது அனுபவ பூர்வமாக எதிர்பார்க்கப்படக்கூடிய விஷயம். ஜப்பானைப் போய் பார்வையிட்ட நம்மவர்களில் ஒருவர் சொல்லியது ஈண்டு குறிப்பிடத் தக்கது. ஜப்பானில் யாசகவர்க்கத்தினர் கிடையதாம். அதற்கு அவர் அறிந்த காரணமாவது அங்கு படியாதவரே இல்லாமற் இருப்பதுதான். எனவே, இப்படிப்பைப் பரவச் செய்வதினால் நம் நாட்டில் வளர்ந்துவரும் இத்தொல்லையும் நீங்கற்பாலதல்லவா? இவ் வியக்கம் அஞ்ஞானத்தை நீக்குவதுடன் யாசகத்தையும் அழிக்கும் சக்தி பெற்றிருக்கிற தல்லவா? இது இதன் மூன்றும் விசேஷமாகும்.

முதியோர் கல்வி முப்பயனை தரக்கூடியது. யாவரும் ஞானத்தை அடையச் செய்கிறது. யாவரும் பொதுஜன நாயகத்தின் உயிர்பெற்ற அங்கங்களாக யிருக்கச் செய்கிறது. யாவரும் யாசக வாழ்க்கையை தவர்த்திருக்கச் செய்கிறது. இதன் புனிதமே புனிதம்.

# சந்தாதார்களுக்கு அறிக்கை

'பாலர் கல்வி' தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தாரால் வெளியிடப்படுவது என்றும் ஆரம்பக் கல்வியின் அபிவிர்த்தியும், ஆரம்ப ஆசிரியர்களின் முன்னேற்றமும் அதன் முக்கிய நோக்கங்களாகும் என்பதும் நேயர்கள் அறிவார்கள். இதன் வருடாந்திர சந்தா ரூபாய் இரண்டே. இப்பத்திரிகையை நடத்திவர முக்கிய வருமானம் சந்தா தொகையே. ஆகவே ஒவ்வொரு சந்தாதாரரும் வரும் வருடத்திற்கு ஒரு புதிய சந்தாதாரரைச் சேர்ப்பாரானல் பாலர் கல்வி பத்திரிகை நிர்வாகிப்பது சிரமமில்லாமலிருக்கும் நல்ல படங்களும், அதிக் கல்விக் கட்டுறைகளையும் பிரசுரிக்க முடியும்.

தவிர, சண்டையினுல் காகிதம் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. விலையும் அதிகமாகயிருக்கிறது. ஒருவருடத்திற்கு வேண்டிய மொத்த காகிதத்தையும் முன்பணம் கட்டி வாங்கவேண்டியிருக்கிறது. ஆகவே சந்தாதாரர்களை தங்கள் சந்தாவை முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

1. எந்த மார்தச் சஞ்சிகையுடன் சந்தா முடிவடைகிறதோ அந்தச் சஞ்சிகையில் அந்தச் சந்தாவின் ஜாபிதாபிரசுரிக்கப்படும்.

2. அதில் குறிப்பிட்ட தேதிக்குள் சந்தாவோ அல்லது பதிலோ வராவிட்டால் அடுத்த மாத சஞ்சிகை வி. பி. யில் அனுப்பப்படும். அல்லது நிறுத்தப்படும்.

3. இதனடியில் ஜில்லா வாரியாகச் சந்தா நம்பர்கள் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும்,
(a) என்பதற்கெதிரினுள்ள சந்தா நம்பருள்ளவர்கள் சில மாத காலமாக சந்தா பாக்கி ரிமைண்டர்களுக்கும் பதில் இல்லை. இவர்கள் **ஏப்ரல் பத்தாந் தேதிக்குள்** சந்தா அனுப்பாவிட்டால் அடுத்த சஞ்சிகை வி. பி. யில் அனுப்பப்படும்.
(b) என்பதற்கெதிரினுள்ள நம்பர்கள் மார்ச் மாதத்துடன் சந்தா முடிவடைகிறது. இவர்களும் **ஏப்ரல் பத்தாந்** தேதிக்குள் சந்தா அனுப்பாவிட்டால் அடுத்த சஞ்சிகை வி. பி. யில் அனுப்பப்படும்.

4. ஜனவரி, பிப்ரவரி மாதங்களுடன் சந்தா முடிவடைந்த நம்பர்களுக்கு ரிமைண்டர் அனுப்பப்பட்டிருக்கிறது. பதிலோ சந்தாவோ, ஏப்ரல் மாதம் பத்தாந் தேதிக்குள் வராவிட்டால் அடுத்த சஞ்சிகை வி. பி. யில் அனுப்பப்படும்.

ஆகையால், தயவுசெய்து சந்தாதாரர்கள் தங்களுடையவும் இப்பத்திரிகையினுடையவும் பரஸ்பர ஆதரவை உத்தேசித்து, சந்தா தொகையை முன் பணமாக அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

குறிப்பு :—ஒவ்வொரு சந்தா நம்பரும் அவரவர்களுடைய மேல் விலாசத்துடன் ( ) அடைப்புக்குள் கொடுக்கப்பட்டிருக்கிறது. கவனிக்கவும். பதிலில் சந்தா நம்பரை எப்பொழுதும் குறிப்பிடவும்.

சென்னை

(*a*) M. 1, 29, 36, 39.
(*b*) M. 2, 5, 23, 24, 26, 33, 38.

செங்கல்பட்டு

(*a*) CH. 2, 13, 14, 16, 20.
(*b*) CH. 1, 4, 5, 17, 18, 21.

சித்தூர்

(*a*) CT. Nil.
(*b*) CT. 4.

வட ஆற்காடு

(*a*) NA. 7, 8, 13, 15, 16, 17, 31, 32, 33, 35, 42, 47, 49.
(*b*) NA. 1, 3, 4, 5, 6, 9, 10, 12, 23, 40, 48, 50.

தென்னாற்காடு

(*a*) SA. 1, 7, 10, 15, 24, 83.
(*b*) SA. 9, 12, 14, 30, 31, 77, 78, 85.

தஞ்சாவூர்

(*a*) Tan. 4, 11, 24, 25, 28, 31, 36, 42, 52.
(*b*) Tan. 1, 5, 12, 15, 16, 17, 20, 22, 23, 44, 45, 46, 47, 51, 60, 68, 69, 70, 71, 72.

திருச்சி

(a) Tri. 14, 21, 22, 25, 30, 32, 33, 40, 42.

(b) Tri. 3, 4, 9, 12, 15, 27, 36, 48, 49.

ராமநாதபுரம்

(a) Rd. 6, 16, 21, 23, 28, 31, 33, 34, 35, 38, 40, 43.

(b) Rd. 1, 4, 5, 9, 10, 12, 13, 29, 53.

மதுரை

(a) Md. 2, 4, 7, 15, 17, 20, 21, 22, 25, 28, 29, 30, 34, 36, 40, 45, 46.

(b) Md. 3, 5, 6, 9, 19, 26.

திருநெல்வேலி

(a) Tin. 26, 29, 42, 43, 45, 49, 52, 54, 56, 58, 59.

(b) Tin, 2, 3, 5, 6, 9, 13, 17, 19, 22, 23, 25, 39, 40, 46, 47, 48, 65, 66, 67, 68, 70.

சேலம்

(a) S. 3, 16, 42, 49.

(b) S. 1, 2, 6, 8, 10, 19, 23, 30, 31, 33, 35, 55.

கோயமுத்தூர்

(a) Co. 1, 5, 9, 14, 15, 16, 22, 43, 50, 55.

(b) Co. 3, 4, 6, 7, 10, 18, 20, 23, 35, 36, 37, 39, 40. 41, 42, 52, 59.

திருவாங்கூர்

(a) Tra. 1.

(b)

F. M. S. etc.

(a) Mis. 1, 7, 11, 16, 17, 18, 20, 21, 22, 23, 24, 25, 27, 28, 32, 33, 34, 35, 40, 50.

(b) 3, 29, 30, 47, 48.

# பாலர் கணிதம்: அளவு (நீளம்)

C. ரங்கநாத அய்யங்கார், M.A., L.T.

ஆரம்பப் பாடசாலைக்கு வருமுன்னமேயே பாலர்களுக்கு அளவு விஷயத்தைப்பற்றி கொஞ்சம ஞானமுண்டு. "இந்த பென்ஸில் அதை விட நீளம், இந்த காகிதம் அதைவிட பெரியது, இந்த புஸ்தகம் அதை விட பருமன்" என்று சாதாரணமாகக் குழந்தைகள் பேசுவதுண்டு. தங்கள் வீட்டிலிருக்கும்போதே இந்த ஞானம் ஏற்படுகிறது. பள்ளிக் கூடத்தில் இந்த ஞானத்தை சுலபமாகவும், சூக்ஷ்மமாகவும் அபிவிருத்தி செய்து, வஸ்துக்களின் அளவு தாரதம்மியத்தை சரியாக அறிவதற்கு வேண்டிய ஞானம் உண்டாக்கவேண்டியது. இரண்டு நீள வஸ்துக்களைக் கொடுத்து எது பெரிது என்றால், குழந்தைகள் சாதாரணமாக இரண்டையும் சேர்த்து வைத்துப் பார்வை மூலமாய் தாரதம்மியத்தைச் சொல்லுவார்கள். ஆனால் இந்த இரண்டு வஸ்துக்கள் பிரிந்து தூரத்திலிருந்தால், அப்போது குழந்தைகளுக்கு கொஞ்சம் சிரமம் உண்டாகும். பலதடவை பார்த்துவிட்டு சொல்லும்படி ஏற்படும். பலதடவை பார்த்தும் சொல்லுவதற்கு அசாத்தியமாயிருக்கலாம். இம்மாதிரி சந்தர்ப்பத்தில்தான் இரண்டையும் பொதுவாக அளக்கும்படியான ஒரு சிறிய அளவின் தேவையுண்டாகிறது. ஒரு சுவர் வேறு ஒரு சுவரைவிட எவ்வளவு நீளம்? இதற்கு பையனுடைய கைச்சாண், அல்லது காலடி வைத்து எத்தனை மடங்கு ஒவ்வொன்றும் இருக்கிறதென்று பார்த்தால் அந்த வித்தியாசத்தினால்தான் எது நீளம், எது குட்டை என்று தெளிவாகிறது. ஒருச் சுவர் 30 காலடியும், மற்றொன்று 20-ம் இருந்தால், முதலாவது மற்றதைவிட நீளம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் இவ்வளவு வித்தியாசமிருக்கிற இரண்டு சுவர்களைப் பார்த்த உடனேயே அளக்காமலேயே நீளம் குட்டை சொல்லிவிடலாம். அப்படியில்லாமல் ஒரு சுவர் 30 அடியும், மற்றொன்று 29 அல்லது 31 அடியிருந்தால், எவருக்கும் இவைகளைப் பார்த்த உடனேயே நீளம் குட்டை என்று சொல்வது அசாத்தியம். இச்சமயத்தில்தான் ஒரு பொது அளவு அவசியம் வேண்டியிருக்கிறது. ஊகையினால் சொல்லப்படும் அளவு சரிதானா என்று பார்க்க ஒரு பொது அளவு அவசியம் வேண்டியிருக்கிறது.

இந்தப் பொது அளவு ஒற்றுப்பார்க்கப்படும் நீளங்களின்மேல் ஆதாரப்படுகிறது. ஆரம்பத்தில் அளவுகளெல்லாம், சாண், காலடி, முழம் இவைகள் மூலமாய் எண்ணப்படுகின்றது. பிறகு கஜம், அடி,

அங்குலம் இவைகள் மூலமாய் தெரிவிக்கவேண்டும். பிள்ளைகளைக் கொண்டே கஜம், அடி, அங்குலக் கோல்களால் அளவு கண்டுபிடிக்க சொல்லவேண்டும். இரண்டு நீள வஸ்துக்களை, கஜக்கோலாலேயும், அடிக்கோலாலேயும், அங்குலத்தினுலேயும் அளக்கச் சொல்லவேண்டும். கஜம், அடி, அங்குலம் இவைகளுடைய சம்பந்தமும் ஒன்றை மற்றென்ருல் அளந்தால் பிள்ளைகளுக்குச் சுலபமாய் தெரியும்

1 அடி = 12 அங்குலம்
1 கெஜம் = 3 அடி அல்லது 36 அங்குலம்

என்பதை பிள்ளைகள் எப்போது மறக்கமாட்டார்கள். ரோட்டு நீளம், ஒரு கிராமத்திற்கும் மற்றொரு கிராமத்திற்குமுள்ள தூரம், இவைகளை 'டேப்' (Measuring tape or Chain) பினுல் அளந்து பர்லாங்கு, மைல் என்கிற அளவுகளையும் உபாத்தியாயர் பிள்ளைகளுக்கு நிஜமாகவே போதிக்கவேண்டும்.

220 கஜம் = 1 பர்லாங்கு
8 பர்லாங்கு = 1 மைல்

என்பதை பிள்ளைகள் பாடசாலை அரையிலில்லாமல், வெளியில் வந்து நேராக தாங்களே அளந்து தெரிந்துகொண்டால், விஷயங்களை எப்போதும் மறக்கமாட்டார்கள். இம்மாதிரி கண்டுபிடிப்பதில் அவர்களுக்கு ஒரு விதமான உற்சாகமுமுண்டாகும்.

இந்தக் கொஞ்ச ஞானத்தைக் கொண்டே அளவுகளைக் கொண்ட அப்பியாசங்கள் கொடுக்கலாம். மாதிரியாக: 2 அடியில் எத்தனை அங்குலம். 4 கஜத்தில் எத்தனை அடி அல்லது அங்குலம். 3 மைலில் எத்தனை பர்லாங்கு அல்லது கஜம் அல்லது அங்குலம்.

இதேமாதிரி கீழ் அளவுகள் கொடுத்து மேல் அளவுகளுக்கு வகுத்தல் மூலமாய் செய்யச் சொல்லலாம். இவைகளில் கூட்டல், கழித்தலும் கொடுக்கவேண்டும்.

# கல்வியும் இளஞ்சாரண இயக்கமும்

(K. K. Lakshminarayanan, Walajabad)

இளஞ் சாரண இயக்கம் அல்லது குருளையர் இயக்கம் சாரண இயக்கத்தின் அஸ்திவாரம். பள்ளிக்கூடத்தில் வரும் பிள்ளைகள் படிப்பதற்குத் தான் வருகிறார்கள் என்பது சிலர் கொள்கை. ஆனால் படிப்பை விட அவன் கற்றுக்கொள்ள வேண்டியவை:—(1) நல்ல எண்ணம், (2) நல்ல காரியம், (3) நல்லொழுக்கம், (4) பரோபகாரம், (5) சகோதர வாஞ்சை, (6) தேசப்பற்று, (7) உண்மை, (8) அன்பு, (9) அஹிம்சை, (10) மரியாதை, (11) கீழ்ப்படிதல், (12) பொறுமை, (13) பொறுப்பு, (14) பெருந்தன்மை, (15) சமூக சேவை.

ஆனால் பள்ளியிலோ கவர்மெண்டாரால் போட்டிருக்கும் பாட ஜாப்தாவை சரிவர நடத்துவதற்கே திண்டாட்டமாகப் போகிறது. ஏனென்றால் கட்டாயக் கல்வி எல்லா இடத்திலும் இல்லாததாலும், ஏழ்மையான நம் இந்தியாவில், பெற்றோர்கள் படிப்பின் முக்கியத்தை நன்குணராமலோ, அல்லது தங்களுக்கு உதவவோ, இளஞ்சிறுர்களை அடிக்கடி நிறுத்திவிடுவதாலும், பள்ளிக்கூடம் நடக்கும் மணிக்குள் நடத்த இயலாதவர்களாகிறோம். ஆகையால் மாணவர்கள் பள்ளியை விட்டுப் போகும்போது கற்கவேண்டிய ஒழுக்கங்களுக்கு சாரண இயக்கம் இருந்தால் மேற்கண்டவைகளை போதிக்க வசதியுண்டு.

அதிலும் படிப்படியாகத்தான் போதிக்க முடியும். அநேகமாக "ஐந்திலே வளையாதது ஐம்பதில் வளையுமா" என்பது போலும், "இளமையிற் கல்" என்பதாலும் பிள்ளைகள் இளஞ்சிறுர்களாக இருக்கும்போதே சொல்லிக் கொடுத்தால் "பசுமரத்தாணி போல்" கள்ளம் கபடமற்ற மூளையில் பதிந்துவிடும். இதற்கு முக்கியமாக உதவுவது "குருளையர் இயக்கம்" தான். சாரண இயக்கத்தில் சட்டமும், விதியும் அதிகமாக இருந்தாலும், அதனுடைய முக்ய த்துவதத்தை குருளையர் இயக்கத்தில் அடிப்படையானவைகளை யுணர்ந்துகொண்டு, சாரணீயத்தில் பின்னல் சேர்வதற்கு ஒரு ஆர்வமும், சந்தோஷமும், பலனை எதிர் பாராமல் உழைக்கவும், சிறிய வயதிலிருந்தே பயிற்சி கிடைத்து வரும். "குருளையர்இயக்கம்" சாரணீயத்தின் ஒரு அஸ்திவாரம் அல்லது சாரணீயத்திற்குப் போடும் ஒரு விதைக்கொப்பாகும்.

அஸ்திவாரம் சரிவர இல்லாமல் பெரிய மாடிவீடு கட்டுவதைவிட அஸ்திவாரம் சரியாயிருந்தால் பணம் கையில் கிடைத்தபோது அடுக்கடுக்காக மாடிகள் கட்டலாம். அதைப்போல பிள்ளைகளை சாரணீயத்தில் சேர்ப்பதற்குமுன் குருளையர் இயக்கத்தில் சேர்த்துப்பின் ஒருவனை சாரணீயத்தில் சேர்த்தால் மிகவும் நலமாயிருக்கும்.

ஏனென்றால் சாரணனுயிருக்க குறைந்த 12 வயதாகவேண்டும். ஆனால் குருளையனுக்கு 7 வயது போதும். ஆகையால் இளஞ்சிறுர்களாக இருக்கும்போதே நல்லவழியில் திருப்ப "குருளையர் இயக்கம்" தான் நமக்கு உதவுகிறது. தவிர 7 வயதில் பிள்ளைகளின் மனம் "காய்ச்சின இரும்புபோலவும்," "பிசைந்த களிமண்" போலவும், நம் இஷ்டப்படி கொண்டுவர முடியும். மேலும் அநேகமாக எல்லா பள்ளியிலும் 5 வது வகுப்புவரையில் தான் இருக்கிறபடியால், நாம் "குருளையர் இயக்கம்" ஆரம்பித்து பிள்ளைகளுக்கு சாரணீயத்தில் பின்சேர ஆர்வத்தைத் தூண்டிவிட்டால், சாரணீயத்திற்கே விதைபோட்டமாதிரி.

எப்படி விதையானது தேறினதாக இருந்தால் நாம் நட்டதும், பூமிக்குள் தங்காமல் வெளிக்கிளம்புமோ அதுபோல நாம் சரிவர முதலில் "குருளையர் இயக்கம்," ஆரம்பித்தால், பின் அதுவே சாரணனுகவும், பின் தேசசேவைக்கும், சமூகசேவைக்கும், வேண்டிய நன்மக்களாக்க உதவுகிறது.

எல்லா கிராம பாடசாலையிலும் "சாரண இயக்கம்" ஏற்படுத்தினுல் நல்லதுதான். ஆனால் ஐந்தாவது வகுப்புவரை உள்ள பள்ளியில் சாரணனுக்கு வேண்டிய 12 வயதுள்ள பிள்ளைகள் அகப்படுவது கஷ்டமென்று ஒன்றும் செய்யாமல் இருப்பதைவிட "குருளையர் இயக்கம்" ஆரம்பித்து பிள்ளைகளுக்கு சராணீயத்தின் முக்கியத்தைப் போதித்து வந்தால் அதில் அவர்களுக்கு ஒரு அவாவும், ஆசையும், உண்டாவது கண்டறிந்த விஷயம். இதுவே நம் சிறுர்களை இளம் வயதிலிருந்தே சிறந்த நன்மக்களாக்க நாம் செய்யும் தொண்டு.

## சிறுவர் பகுதி—1.

கதை

# மூக்கு நீண்ட விதமும் மூக்கு சுருங்கின மாயமும்

ஒரே ஒரு ஊரில் மூன்று சிநேகிதர்கள் இருந்தார்கள். அவர்கள் பெயர் முருகன், வேலன், கண்ணன். இந்த மூன்று பேர்களும் ஒரு தோட்டத்தில் வேலைசெய்து வந்தார்கள். ஒரு சமயம் அவர்கள் மூவரும் சேர்ந்து தங்களது ஊருக்குப் போகப்புறப்பட்டார்கள். வழிப் பிரயாணத்திற்காக ஒரு கட்டு சாத மூட்டையும், ஒரு மண் கூஜாவும், கொஞ்சம் வெற்றிலை பாக்கும் எடுத்துச் சென்றார்கள். போகும் வழியில் ஒரு காடு இருந்தது. அப்பொழுது சாயங்காலம் ஆகிவிட்டது. இராத்திரியில் காட்டில் தங்க நேரிட்டது. ஆகவே அவர்கள் ஒரு தீர்மானம் செய்தார்கள். அதாவது இருவர் தூங்கும்பொழுது ஒருவர் விழித்திருக்க வேண்டும். புலி சிங்கம் வராமல் கையில் தீவட்டி பிடித்துக்கொண்டு அவன் காவல் புரியவேண்டும் என்பதுதான்.

முதன் முதலில் முருகன் காவல் காத்து வந்தான். பாக்கி இருவரும் தூங்கிவிட்டார்கள். அச்சமயம் ஒரு வேடிக்கையான மனிதன் முருகனை நோக்கி வந்தான். வந்தவன் குள்ளமாயும், நீண்ட தொப்பியும், நீண்ட தாடியுமுள்ளவனுயிருந்தான். குள்ளன் முருகனை நோக்கி "அப்பா! உன்னைப் பார்த்ததற்கு மிகவும் சந்தோஷம். நான் சாப்பிட்டு எவ்வளவோ நாளாயிற்று. வெகு பசியாயிருக்கிறேன். கொஞ்சம் சாதம் இருந்தால் கொடு" என்றான். முருகன் குள்ளனுக்குக் கொஞ்சம் சாதம் போட்டான். குள்ளனுக்கு வெகு சந்தோஷமாயிற்று. உடனே குள்ளன் தன்னிடமிருந்த ஒரு சட்டையைக் கொடுத்து "நீ இந்தச் சட்டையைப் போட்டுக் கொண்டு எங்கே போகவேண்டுமென்று நினைத்தாலும் அங்கே போய்





விடலாம்,'' என்றான். முருகன் அதைப் பத்திரமாக வாங்கி வைத்துக் கொண்டான்.

சற்று நேரம் கழித்து வேலன் விழித்துக்கொண்டான். முருகன் படுத்துக்கொண்டான். வேலன் காவல் செய்துவந்தான். மறுபடியும் அதே சித்திரக் குள்ளன் வந்து சேர்ந்தான். அவன் வேலனிடம் வந்து "அப்பா! நீ நல்லவனாகக் காண்கிறாய். எனக்கு இப்பொழுது ரொம்ப தாகமாயிருக்கிறது. கொஞ்சம் ஜலம் கொடு'' என்றான். வேலன் தனது மண் கூஜாவிலிருந்து குள்ளனுக்குத் தண்ணீர் வார்த்தான். குள்ளன் வேண்டியமட்டும் தண்ணீர் குடித்தான். பிறகு அவன் வேலனைப்பார்த்து "இந்தா, இந்தப் பையை எடுத்துக் கொள். இந்தப் பையினுள் கைவிட்டால்; எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கிடைக்கும். ஜாக்கிரதையாக வைத்துக்கொள்'' என்றான்.



மறுபடி கண்ணன் விழித்துக்கொண்டான். வேலன் படுத்துத்தூங்கிவிட்டான். இந்த சமயமும் குள்ளன்வந்து சேர்ந்தான். குள்ளன் கண்ணனைப்பார்த்து "அப்பா! வெற்றிலைபாக்கு போடாமல் என் பல்வலி எடுக்கிறது. கொஞ்சம் வெற்றிலைபாக்கு கொடு. ரொம்ப புண்ணியம் உண்டு'' என்றான். கண்ணன் தன் பையிலிருந்து கொஞ்சம் வெற்றிலைபாக்குக் கொடுத்தான். குள்ளன் வாய்நிறைய வெற்றிலை பாக்கு போட்டு மென்றான். குள்ளனுக்கு ரொம்ப சந்தோஷம் பிறந்தது. குள்ளன் கண்ணனுக்கு ஒரு ஊதல் கொடுத்து "கண்ணா! உனக்கு எப்பொழுதாவது ஆபத்து வந்தால் இந்த ஊதலை ஊது. உன்னுடைய சிநேகிதர்கள் எங்கிருந்தாலும் அந்த சப்தத்தைக் கேட்டு ஓடிவந்து விடுவார்கள். உன்னை ஆபத்திலிருந்து தப்புவிப்பார்கள்'' என்றான் மறுபடி குள்ளன் போய்விட்டான். சற்று நேரம் கழித்து மூன்றுபேரும் விழித்துக் கொண்டார்கள். இரவில் தாங்கள் பார்த்த குள்ளனைப் பற்றி எல்லோரும் பேசிக்கொண்டார்கள். குள்ளன் சொன்னது நிஜமா என்று பரீக்ஷை செய்ய நினைத்தார்கள். முருகன் தன் சட்டையைப் போட்டுக்கொண்டு எங்கள் எல்லோருக்கும் நல்ல மாடிவீடு வேண்டும்'' என்று நினைத்தான். உடனே அவர்கள் எல்லோரும் ஒரு பெரிய பங்களாவில் இருக்கக் கண்டார்கள். என்ன அழகான இடம்!





எவ்வளவு பெரிய தோட்டம்!! தோட்டத்தைச் சுற்றி என்ன அழகான புஷ்பச் செடிகள் !!!

வேலன் பணப்பையில் கையைப் போட்டான். பவுன் பவுனுகப் பணம் வந்துகொண்டேயிருந்தது. குதிரைகளும், வண்டிகளும், அழகான உடுப்புகளும் வாங்கினுர்கள். வேலைக்காரர்களை அமர்த்தினுர்கள். தங்களுக்கு இஷ்டமான போஜனம் தயார்செய்து சாப்பிட்டார்கள். பலபேர் இவர்களைக் காண வந்தார்கள். இந்த மூவருக்கும் என்ன அதிர்ஷ்டம் என்று பேசிக்கொண்டார்கள்.

இவர்கள் இருந்த இடத்திற்குப் பக்கத்தில் உள்ள ஊரில் பூபதி என்ற இராஜா இருந்து வந்தான். அவனுக்கு ஒரு பெண் உண்டு. அவளுக்கு சுந்தரி என்று பெயர். சுந்தரி வெகு சாமர்த்தியசாலி. மிகவும் தந்திரக்காரி. தன்னிஷ்டப்படி வேஷம் போட்டுக்கொள்ளுவாள். நன்ருகப் பாடுவாள். வெகு சந்தோஷமாகப் பிறருடன் பேசுவாள். அவளுக்கு வைத்தியம் செய்யத் தெரியும், மருந்துகள் பண்ணத் தெரியும்.

ஒருநாள் முருகன், வேலன், கண்ணன் இவர்கள் மூவர்களும் பூபதியைக் காண வந்தார்கள். பூபதியும் அவனது மகள் சுந்தரியும் அவர்களை வெகு மரியாதையாக வரவேற்ருர்கள். அவர்களுக்குத் தக்க உபசாரம் செய்தார்கள். சுந்தரி அவர்களுக்கு இனிமையான பழங்களும் பானங்களும் கொடுத்தாள். ஆனுல் சுந்தரி எப்படியோ இவர்களுக்கு அதிர்ஷ்டம் உண்டான விதத்தை தெரிந்துகொண்டாள். ஆகவே அவள் சட்டை, பணப்பை, ஊதல் இவை மூன்றையும் எப்படியாவது எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சமயம்பார்த்து வந்தாள்.

ஒருநாள் வேலன் சுந்தரியைக் காணவந்தான். சுந்தரி வேலனுடன் சந்தோஷமாக பேசிக்கொண்டிருந்தாள். அவனுக்கு ஒரு தங்கக் கிண்ணத்தில் கொஞ்சம் பால் கொடுத்தாள். ஆனுல் அந்தப் பாலில் கொஞ்சம் மருந்து கலந்திருந்தாள். வேலன் அதை சாப்பிட்ட உடனே கொஞ்சம் மயக்கம் அடைந்தான். சுந்தரி அந்த சமயத்தில்

தன்னிடமுள்ள ஒரு பையை அவனது சட்டைப்பையில் வைத்துவிட்டு, மாயப்பையை தான் எடுத்துக்கொண்டாள். வேலன் தூங்கி எழுந்ததும் தன் பங்களா சேர்ந்தான். பணப்பையை எடுத்து அதினுள் கையை விட ஒரு காசாவது வரவில்லை. உடனே அவன் நடந்த சூதை அறிந்து கொண்டான்.

அப்பையை எப்படியாவது சுந்தரியிடமிருந்து எடுத்துக்கொண்டு வரவேண்டுமென்று முருகன் நினைத்தான். அவன் தனது மாயச்சட்டையை மாட்டிக்கொண்டு சுந்தரியின் அறையில் சென்றான். சுந்தரி அவனைப் பார்த்ததும் "திருடன், திருடன்" என்று கூக்குரலிட்டாள். முருகன் அவசரம் அவசரமாக ஜன்னலில் ஏறி குதித்து ஓடிவிட்டான். குதிக்கும்பொழுது அவனது மாயச்சட்டை ஒரு ஆணியில் மாட்டிக் கொண்டது. சுந்தரி அந்த சட்டையையும் எடுத்துக்கொண்டாள். அதைத் தன் பெட்டியில் பத்திரமாய் வைத்துவிட்டாள். சுந்தரியிடம் மாயப் பணப்பையும், மாயச்சட்டையும் அகப்பட்டுவிட்டன. கண்ணன் எப்படியாவது அவற்றை எடுத்துவரவேண்டுமென்று நினைத்தான். ஆகவே தன் ஊதலை ஊதினான். அந்த சத்தம் கேட்டு அவனுடன்கூட தோட்டத்தில் வேலைசெய்த பல சிநேகிதர்களும் அங்கு ஓடிவந்தார்கள். ஒரு பெரிய சேனையே சேர்ந்து விட்டது. எப்படியாவது இவர்கள் உதவியால் இராஜா பூபதியோடு சண்டைசெய்ய கண்ணன் ஏற்பாடு செய்தான். சுந்தரி இந்த சமாசாரத்தைக் கேட்டாள். அவள் வேறு வேஷம் போட்டுக்கொண்டு ஒரு புல்லாங்குழல் எடுத்துக்கொண்டு அந்த சேனையின்முன் வந்து சந்தோஷமாகப் பாடினாள். கண்ணனும் அவனது சிநேகிதர்களும் தங்களது வீட்டை விட்டு புல்லாங்குழல் கச்சேரி கேட்கவந்து விட்டார்கள். சுந்தரியின் வேலைக்காரி ஒருத்தி கண்ணன் அறைக்குள் புகுந்து அவனது மாய ஊதலையும் எடுத்துக் கொண்டு வந்து விட்டாள். பாட்டுக்கச்சேரி முடிந்தது. எல்லோரும் தங்கள் வீட்டுக்குச் சென்று விட்டார்கள். கண்ணன் தன் அறையில் புகுந்தான். அங்கிருந்த ஊதலையும் காணோம்.

இப்படியாகக் கண்ணன், வேலன், முருகன் மூவரும் தங்களது மூன்று சாமான்களையும் இழந்து விட்டார்கள். அவர்கள் அந்த ஊரை விட்டு வேறு எங்கேயாவது போகலாமென்று புறப்பட்டார்கள். முருகனும் வேலனும் ஒரு வழியாகச் சென்றார்கள். கண்ணன் மாத்திரம் வேறு வழியே சென்றான். கண்ணன் ஒரு மரத்து அடியில் நிழலில் படுத்துத் தூங்கினான். தூங்கி எழுந்ததும் பசியாயிருந்தது. அந்த மரத்தடியில் சில பழங்கள் விழுந்து கிடந்தன. அவற்றில் ஒரு பழம் எடுத்துக் தின்றான். அவன் மூக்கில் ஒருவலி உண்டாயிற்று. அவன் மூக்கு கொழுக்கட்டைபோல் வீங்கிவிட்டது. சற்று நேரத்தில் ஒரு புடலங்காய் மாதிரி நீண்டு விட்டது. மறுபடியும் உலக்கை போல் நீண்டது. கொஞ்ச நேரத்தில் யானைத் துதிக்கைபோல் ஆகிவிட்டது. கண்ணன் தவிக்கிறான்.

ஐயோபாவம்! அவனால் எழுந்திருக்க முடியவில்லை! மூக்கு வரவர நீண்டு கொண்டே போகிறது! கண்ணன் என்ன கஷ்டமோ இது, யான் என்ன பாவம் செய்தேன். யார் வந்து மருந்து கொடுத்து இதை சொஸ்தம் செய்வார்கள். ஆ கடவுளே! என்று அண்ணாந்து பார்த்தான். அந்த சமயத்தில் இவனது சிநேகிதர்கள் இருவரும் வந்துகொண்டிருந்தார்கள். ஏதோ ஒன்று தரையில் நீண்டு புரண்டுகிடந்தது. அது தடுக்கி அவர்கள் இருவரும் "அப்பாடா" என்று விழுந்தார்கள். கண்ணன் "ஐயையோ" என்று கத்தினான். "ஏது இது கண்ணன் குரல்போலிருக்கிறதே" என்று முருகனும் வேலனும் கண்ணன் சமீபம் வந்தார்கள். கண்ணன் படுகிற கஷ்டத்தைப்பார்த்து மிகவும் துக்கம் அடைந்தார்கள். இருவரும் மெதுவாக கண்ணனைத் தூக்கப்பார்த்தார்கள்.




அதேசமயத்தில் முதல் நாள் இராத்திரி வந்த குள்ளன் அங்குவந்து சேர்ந்தான். கண்ணன் அவனைப்பார்த்து "ஐயா வலிபொறுக்க முடியவில்லையே, என்ன செய்வேன், இதற்கு ஏதாவது மருந்துகிடையாதா? ஒன்றும் தெரியாமல் இந்த மரத்தின் பழத்தைத் தின்று விட்டேன்" என்றான். அது கேட்ட குள்ளன் வேறு ஒரு மரத்தின் பழத்தைக் கொணர்ந்து கொடுத்தான். அதைத் தின்றதும் கண்ணன் மூக்கு கொஞ்சம் கொஞ்சமாக சுருங்கிவிட்டது. பழைய மாதிரி ஆகிவிட்டது. எல்லோரும் மிகவும் சந்தோஷப்பட்டார்கள். மூக்கு நீண்ட விதத்தையும் மூக்கு சுருங்கிய மாயத்தையும் அறிந்து ஆச்சரியப்பட்டார்கள். மூவரும் எப்படியாவது சுந்தரியினிடத்திலுள்ள மாயப்பை, மாயச் சட்டை, மாய ஊதல் இவைகளைத் திரும்ப அடைய எண்ணினார்கள். கண்ணன் அதற்கு ஒரு யுக்தி சொன்னான். மூக்கு நீளச்செய்த பழத்தில் நல்லதாக ஒன்றை சுந்தரிக்குக் கொடுத்துவர நினைத்தான். அவன் பழக்காரன்மாதிரி வேஷம் போட்டுக்கொண்டான். தலையில் ஒருகூடை நிறைய பழம் எடுத்துக்கொண்டான். மூக்கு நீளச்செய்த பழம் சிலவைகளை மேலேவைத்துக் கொண்டான். சுந்தரி இருக்கும் அரண்மனை வாசலில் வைத்துக்கொண்டு "பழமோ பழம்" என்று விற்றான். அதை கண்ட சுந்தரி நல்லதாக ஒரு பழம் வாங்கிச்சாப்பிட்டாள். கண்ணன் ஓட்டமாக ஓடி காட்டிற்கு வந்துவிட்டான். சுந்தரிக்கு மூக்கு கொழுக்

கட்டைபோல் வீங்கிவிட்டது. புடலங்காய்போல் நீண்டுவிட்டது. பிறகு உலக்கைபோல் ஆயிற்று. மறுபடி யானைத் துதிக்கைபோல் நீண்டு விட்டது. ஐயையோ! என்ன செய்வாள். கதறுகிருள்!

பூபதி அரசன் அநேக வைத்தியர்களை வரவழைத்தான். அவர்கள் எவ்வளவோ மருந்து கொடுத்தார்கள். மூக்கு சுருங்கவேயில்லை. நீண்டு கொண்டே வந்தது. பல மந்திரவாதிகளும் எவ்வளவோ மந்திர தந்திரம் செய்தும் ஒன்றும் பிரயோஜனமில்லை, மூக்கு சுருங்கின பாடில்லை. யாராவது ஒருவன் என் பெண் சுந்தரியின் மூக்கைக் குணப் படுத்திஞல் அவனுக்கு வேண்டிய பணம் தருவதாக இராஜா தண்டோரா போட்டான்.

கண்ணன் ஒரு வைத்தியன் மாதிரி மாறு வேஷம் போட்டுக் கொண்டு அரசனிடம் வந்தான். "நான் நல்ல வைத்தியம் செய்து மூக்கை சொஸ்தப் படுத்தி விடுகிறேன். ஆனுல் எனக்குப் பணம் ஒன்றும் வேண்டாம். தங்கள் பெண் மூன்று பண்டங்களை திருடி வைத்திருப் பதாக நான் மந்திரத்தால் கண்டறிந்தேன். அவைகளைத் திருப்பிக் கொடுத்து விட்டால் மூக்கை சொஸ்தப் படுத்தி விடுகிறேன்" என்ருன். பூபதி சுந்தரியைப் பார்த்து "திருடி வைத்த பண்டங்களைத் திருப்பிக் கொடுத்து விடு" என்று பலதரம் சொல்லியும் அவள் கேட்கவில்லை. "என்னிடத்தில் ஒன்றுமில்லை" என்று சொல்லிவிட்டாள். கண்ணன் திரும்பிப் போய்க் கொண்டிருந்தான்.

பூபதி சுந்தரியைத் தனியாகக் கேட்டான். அப்பொழுது தன்னிடமுள்ள சட்டை, பணப்பை, ஊதல் இவை மூன்றையும் கொடுத் தாள். பூபதி கண்ணனை ஓடோடி அழைத்து வந்து அவை மூன்றையும் கொடுத்தான். கண்ணன் அவைகளை வாங்கிக் கொண்டான். தனது பையிலிருந்த மூக்கு சுருங்கும் பழம் ஒன்று எடுத்து சுந்தரிக்குக் கொடுத் தான். சுந்தரி மூக்கு சுருங்கிவிட்டது. சுந்தரிக்கும் இராஜா பூபதிக்கும் உண்டான சந்தோஷத்திற்கு அளவேயில்லை.

கண்ணன் மாயச் சட்டை, மாயப்பை, மாய ஊதல் இவைகளை எடுத்துக் கொண்டு தன் சிநேகிதர்களிடம் வந்தான். மூவரும் அந்த மூன்று வஸ்துக்களையும் வைத்துக் கொண்டு தங்களது அரண்மனையில் வெகு காலமாக சந்தோஷமாக வசித்து வந்தார்கள்.

—ஜகந்நாதன்.

# செய்தித் திரட்டு

## (1) மாணவர் கல்வி அபிவிருத்தி சங்கம் ஏ. ஆர். என். பாடசாலை, சிவகங்கை

இச்சங்கத்தின் மூன்றுவது ஆண்டு விழாவும் ஸ்தாபிதரின் படத்திறப்பு விழாவும் 10-2-41-ம் தேதி திவான்பகதூர் ஸ்ரீ. J. பாலாஜி ராவ், B.A., M. C. S. அவர்கள் தலைமையில் சிறப்பாக நடந்தேறியது. சப்ரிஜிஸ்தரார் ஸ்ரீ செல்வச்சிவம் பிள்ளை உருக்கமான சொற்பொழிவுடன் படத்தைத் திறந்துவைத்தார். நாட்டரசன் கோட்டை தலைமை ஆசிரியர் ஸ்ரீ A. சுப்ரமணிய அய்யர் "கைத்தொழிற் கல்வி" என்னும் விஷயம்பற்றி சிறந்த உபன்னியாசம் செய்தார். மாணவர்களுள் பல விதப் போட்டிகள் நடந்தன.

## (2) மாணவர் சங்கம், போர்டு ஹையர் எலிமெண்டரி பாடசாலை, ஹரூர்

6-2-1941-ல் இச்சங்கம் கூடிற்று. சேலம் ஜில்லா கல்வி அதிகாரி ஜனுப், S. M. அப்துல்லா சாகிப் பகதூர் அக்ராசனம் வகித்தார்.

கடவுள் வாழ்த்துக்குப்பின், காரியதரிசியால் சென்ற மீட்டிங் விவரங்கள் படிக்கப்பட்டது. சங்கத்தின் பிரஸிடெண்டு ஸ்ரீமான் S. ரங்கசாமி ஐயங்கார் சங்கத்தின் சுமார் 20 வருஷத்திய சரித்திரத்தை எடுத்துக் கூறினர்.

பிறகு அக்கிராசனர் தான் உபாத்தியாராகவிருந்து மாணவ மாணவிகளோடு பழகுவதில் அதிக ஆசை உடையவரென்றும் மாணவர்கள் தங்கள் விசேஷ சக்தியை அறிந்துகொண்டு அதை அபிவிருத்தி செய்யவேண்டுமென்றும், சங்க மாணவர்கள் சாரணப்பயிற்சி பெற வேண்டுமென்றும் விரிவாகப் பேசினர்.

வந்தனேபசாரத்துடன் முடிவுற்றது.

## (3) பெற்றேர் சங்கம், செயிண்டுமேரி உயர்தர ஆரம்ப பெண்பாடசாலை, மணப்பாடு

16-2-41-ல் இச்சங்கத்தின் மூன்றுவது கூட்டம் நடைபெற்றது. Mrs. ராஜம் அருள், B. A., L. T., தலைமை வகித்தார். மானேஜர் Rev. Fr. B. Fernando எல்லோரையும் வரவேற்றார்.

இச்சங்கத்தின் அவசியத்தைப்பற்றி சிலர் நேர்த்தியாகப் பேசினார்கள்.

தலைவி முடிவுரையில் நமது தேச முன்னேற்றம் வருங்காலத்துச் சிறுவர்களின் கல்வியையும் ஒழுக்கத்தையும் பொறுத்திருக்கிறதென்றும், சிறுவர்கள் சமத்துவம், சகோதரத்துவம், முதலிய சீரிய ஒழுக்கங்களையடைவதற்கு பெற்றோரின் கூட்டுறவு இன்றியமையாததென்றும் வெகு நேர்த்தியாகக் கூறினார்கள்.

---

## (4) குலசேகர பட்டினம், பண்டாரசிவன் ஞாபகச் சின்ன பள்ளிக்கூடத்தில் அமைத்துள்ள "திருமுகானந்தம் நினைவுக்கூடத்தின்" திறப்பு விழா

7-2-41-ல் திருநெல்வேலி ஜில்லா கல்வி அதிகாரி கனம் K. I. Verghese, B.A., (Hons.) Oxon, அவர்கள், கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.

பள்ளிக்கூடச் சாரணர்களும், பெரியோர்களும் தலைவரை ஊர் வலமாக அழைத்துவந்தார்கள். இவ்விழாவிற்கென்றே தயாரிக்கப் பட்ட ஆடல் பாடல்களை சிறுவர் சிறுமிகள் நடித்துக்காட்டினர்.

பிறகு ஸ்ரீ R. லக்ஷ்மணபிள்ளை அவர்கள் பள்ளிக்கூட வரலாற்றைப்பற்றியும், புதிய கட்டிடத்தின் விவரத்தையும்பற்றியும் எடுத்துக் கூறினார்.

தலைவர் பேசியபொழுது ஆரம்பக்கல்வியின்றி தேசம் முன்னேற்றமடையாதென்றும், நம் நாட்டில் ஆரம்பக்கல்வி போதிய ஆதரவு பெறவில்லை என்றும், மானேஜர்கள் பாடசாலைகளில் பிள்ளைகளுக்குப் போதிய இடவசதி செய்துகொடுப்பதில் ஊக்கம் காட்டவேண்டுமென்றும், ஆனால் இப்பள்ளிக்கூட மானேஜர் சர்க்கார் உதவியின்றி ரூ. 2500 செலவில் இக்கட்டிடத்தைக் கட்டி உதவியது பாராட்டத் தக்கது என்று கூறினார். விழாவிற்கு ஏராளமாக அயலூர் பெரியார்களும், உள்ளூர் பிரமுகர்களும், தாய்மார்களும் வந்திருந்தனர்.

---

## (5) வாலாஜாபாத் ஆரம்பாசிரியர் கழகம், ஆண்டு விழா

இச்சங்கத்தின் வருஷாந்திரவிழா 15-2-41-ல் ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ S. ஸச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தலைமையில் நடந்தது. அப்பொழுது ஸ்ரீ C. M. ராமச்சந்திர செட்டியார் ஆசிரி

யர்களின் கடமையைப்பற்றியும், காஞ்சீபுரம் முனிசிபல் சூபர்வைசர் ஸ்ரீ M. R. ஸ்ரீனிவாசராகவன் ஆரம்ப பள்ளிகளில் "Hand work" போதிப்பதைப்பற்றி மாதிரிகளுடன் விளக்கிக் காட்டினார்.

---

## (6) சிவகங்கை ஸெண்டர் ஆரம்ப ஆசிரியர் சங்க ஆண்டு விழா

22-2-41-ல் விழா கொண்டாடப்பட்டது. ராமநாதபுரம் ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ M. R. சுப்ரமணிய அய்யர் தலைமை வகித்தார். மாலை கைத்தொழில் போதனாமுறை சாதனங்களின் பொருட்காக்ஷி திறந்து வைக்கப்பட்டது. ஆசிரியர்களும் மகா ஜனங்களும் திரளாக விஜயம் செய்தனர்.

தலைமை ஆசிரியர் ஸ்ரீ J. ரெங்கசாமி அய்யர் "தற்கால ஆரம்பக் கல்வி" என்பதுபற்றி பேசினார். ஆரம்பக் கல்விவிஷயமாய் சர்க்காரின் புதிய கொள்கையையும், அதை நிறைவேற்ற கல்வி இலாகா செய்துள்ள பெருமுயற்சிகளையும்பற்றி விவரித்தார். புதிய பாடதிட்டம் கிராண்ட் விதிகள் முதலியவற்றைப்பற்றி விளக்கினார்.

அக்ராசனர் உபாத்தியாயரின் நிலைமையைப்பற்றி அனுதாபம் காட்டி, பெற்றோர்களின் ஒத்துழைப்பால் பெரும் பயன் உண்டென்பதை விளக்கினார்.

சங்கத்தின் அங்கத்தினர் 'ராமதாஸ்' என்ற நாடகம் நடித்தனர்.

---

## (7) உபாத்திமைச் சங்கம், பெருநகர்

22-2-41-ல் இச்சங்கத்தின் கூட்டம் நடந்தது. தமிழ் வித்துவான் ஸ்ரீ பிச்சிலிங்க முதலியார் தலைமை வகித்தார்.

காஞ்சீபுரம் பச்சையப்ப உயர்தர கலாசாலை உதவி ஆசிரியர் ஸ்ரீ வஜ்ஜிரவேல் முதலியார் பாடம் போதிக்கும் முறைகளில் பல நன்மைகளும் சில தீமைகளும் உண்டெனவும், போதிக்கும்பொழுது ஆசிரியர்கள் நன்மைகளையும், பிள்ளைகளின் ஊக்கத்தையும், பாடத்தின் இன்பமான பாகத்தையும் பெரிதும் கருதவேண்டும் என்றும் திருவாய் மலர்ந்தருளினார்.

அறநெறிச்சார நூலிலிருந்து "தம்புண்கழுவி மருந்திடுவர்" என்று தொடங்கும் செய்யுளை மாதிரி பாடமாக போதித்தார். செய்யுளில் புதைந்துகிடக்கும் பொருளைச் சிறிது சிறிதாகப் பிள்ளைகளின்

மனதினின்றே சிறு விளக்களுடன் வெற்றிகரமாக வெளியே கொண்டு வந்தார். பிறகு இலக்கண விசேடங்களை போதித்தார்.

வந்தனோபசாரத்துடன் முடிவுற்றது.

---

## (8) செஞ்சி தாலுக்கா பெண்பாடசாலை ஆரம்ப ஆசிரியைகளின் சங்க வருஷாந்திர விழா

22-2-41-ல் ஷை விழா விழுப்புரம் ரேஞ்சு கல்வி இலாக சப்அஸிஸ்டெண்ட் இனிஸ்பெக்டரஸ் ஸ்ரீமதி Miss. A. நோரோனு அம்மையார் B. A., L. T., அவர்கள் தலைமையில் கொண்டாடப் பட்டது.

1. கடவுள் வணக்கம் நடந்த பின் அக்கிராசனருக்கு சங்கத்தின் சார்பாக உபசார பத்திரம் ஒன்று செஞ்சி பெண்பாடசாலை தலைமை உபாத்தியாயர் ஸ்ரீ. M. முனுஸாமி கவுண்டர் அவர்களால் வாசித்து கொடுக்கப் பட்டது:

2. பிறகு சங்கத்தின் வருஷாந்திர அறிக்கை சங்க காரியதரிசி சக்கிராபுரம் பெண்பாடசாலை தலைமை உபாத்தியாயனியும் ஸ்ரீமதி Miss. S. குழந்தை தெரஸ் அவர்களால் வாசித்து கொடுக்கப் பட்டது.

3. ஆசிரியைகளின் கடமை என்பதைப் பற்றி விழுப்புரம் போதனு முறை பாடசாலை உதவி ஆசிரியர் ஸ்ரீ T. K ராஜகோபால் அய்யங்கார் M. A., L. T., அவர்களால் ஓர் உபந்நியாஸம் செய்யப் பட்டது.

நம் தேசத்தின் பெண்மக்கள் கல்வி கற்பது அவசியம் என்றும் எவ்விதத்திலேனும் நம் நாட்டு பெண்டிர் அனைவரும் கற்றவர்களாக ஆகும்படி செய்ய முயலுவது முக்கியமான ஒரு கடமையாகு மென்றும் அதன் நிமித்தம் ஆசிரியைகள் பாடு பட வேண்டுமென்றும் கூறப்பட்டது.

4. ரேஞ்சு பெண் பாடசாலைகளின் சிறுமிகளால் கும்மி, சம்பாஷணை, வேடிக்கை, இந்திய இங்கிலீஷ்டான்ஸ் முதலியன நடை பெற்றன.

5. இறுதியில் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் முடிவில் தேனீர் கச்சேரி ஒன்று நடைபெற்று ராஜ வாழ்த்துடன் விழா முடிவுற்றது.

---

## செங்கற்பட்டு ஜில்லா போர்டு ஆசிரியர்கள் மாநாடு அழைப்பு இதழ்.

அன்புமிக்க ஆசிரியர்கள் அவர்களே!

நாளது 1941-ம் வருஷம் ஏப்ரல் மாத இறுதியில் சென்னை, சைதாப்பேட்டை அல்லது பூனமல்லியில் பல அறிஞர்கள் தலைமையில்

ஜில்லாபோர்டு ஆசிரியர்கள் மாநாடு ஒன்று கூட்ட, ஸ்ரீபெரும்பூதூர் தாலுக்கா ஜில்லாபோர்டு தாலூக்கா யூனியன் தலைவர், கமிட்டி அங்கத்தினர் முதலியவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அதில்:—

1. ஒவ்வொரு தாலூக்காவிலும்; ஐக்கிய நாணயச் சங்கம் ஒன்று ஏற்படுத்துதல்.
2. ஜில்லா யூனியன் நிறுவுறுதல்.
3. சம்பள உயர்வு கொடுத்த காலத்தில் விடுபட்டுப்போன (1934-38) 4 வருஷத்தைக் கணக்கிட்டுக் கொடுக்க வேண்டல்.
4. சம்பள வெட்டை நீக்குதல்.
5. கனம். டைரக்டர் அவர்களிடம் நேரில் சென்று நமது குறைகளை நிவர்த்திக்கக் கேட்டல் முதலியவைகளைப் பற்றிப் பேசப்படும்.

இந்த ஜில்லாவிலுள்ள ஆசிரியர்கள் பலரும் அந்தந்த சென்டர்களின் பிரதிநிதிகள் அவர்கள் தங்கள் சொந்த செலவில் அவசியம் வந்து கூட்டத்தை இனிது நடத்திவைக்க வேண்டுகிறோம்.

வருவதாக வாக்களிக்கும் ஆசிரியர்கள் கீழ்கண்டவிலாசத்திற்குத் தெரிவித்தால் முழுவிவரம் கொண்ட அழைப்பு இதழ் அனுப்ப சௌகரியப்படும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஆசிரியர் சகோதரர்கள் பலரும் இதைப் பெரிதும் பொருட்படுத்தி பதில் அனுப்புவார்கள் என்றும் குறைகளை தீர்மானங்கள்மூலம், நிறைவேற்றி மாநாட்டில் வைக்க அனுப்புவார்கள் என்றும் நம்புகிறோம்.

70. கோவூர்
உயர்தர பாடசாலை,
பூனமல்லி

C. பாலசுப்ரமண்யம்
காரியதரிசி.

---

## மதுரை ஜில்லா போர்டு ஆரம்ப ஆசியர் ஐக்கிய சங்கம், உத்தமபாளையம்

---

R. ராமசாமி அய்யர், (காரியதரிசி, மதுரை.)

மதுரை ஜில்லா போர்டு ஆரம்ப ஆசிரியர்களின் ஜில்லா யூனியன் ஸ்தாபிதம் செய்ய ஓர் ஆரம்பக்கூட்டம் 25-3-40-ல் மதுரை விக்டோரியா எட்வர்ட்டு டவுன் ஹாலில் மதுரை ஜில்லா போர்டு உபதலைவர் ஸ்ரீ கோ. வெங்கிடாசலபதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. எல்லாத் தாலூக்காக்களிலிருந்தும் ஆசிரியர்கள் வந்திருந்தனர். இது சங்கத்திற்கு வேண்டிய விதிகள் தயாரிக்கவும் பின் மகாநாடு கூட்டவும்

ஸ்ரீ S. ராயப்பன் அவர்களைத் தலைவராயும் ஸ்ரீ R. ராசாமி அய்யரைக் காரியதரிசியாகவும் இவர்களன்னியில் எழுவர்கொண்ட ஒரு சப் கமிட்டி நியமிக்கப்பட்டது.

பின்னர் கல்வி இலாகா டைரக்டரவர்கள் ஜில்லாச் சங்கம் G. O. 416 L. I. M, 4-2-39 உத்திரவில் குறிப்பிடப்படவில்லையென்று ஜில்லாபோர்டாரவர்கள்மூலம் இச்சங்கத்திற்கு தெரிவித்துவிட்டார்கள்.

6—10—1940-ல் ஜில்லா மஹாநாடு மதுரை விக்டோரியா எட்வர்ட்டு ஹாலில் நடைபெற்றது ஜில்லாச் சங்கத்தின் அவசியத்தை வற்புறுத்தியும் இதைக் கல்வி இலாக டைரக்டரவர்கள் புனராலோசனைசெய்து G. O. L. I. M. 416-ஐ விரிவுபடுத்தி ஜில்லாச் சங்கங்கள் (Dt. Board Teachers' Union) ஸ்தாபித்துக் கொள்ளலாமென அனுமதிக்கவேணுமாய் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஷை தீர்மானங்களின் நகல்கள் கல்வி இலாகா டைரக்டாவர்கள், கோயம்புத்தூர் டிவிஷனல் இன்ஸ்பெக்டரவர்கள், சென்னை கவர்ன்மெண்ட் கல்வி இலாகா செக்ரட்டரி இவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

பெரியகுளம் தாலூகா யூனியனும் தனது 21—12—'40௳ மஹாசபையில் ஜில்லா யூனியன் ஸ்தாபிதம் செய்ய அனுமதிக்க வேணுமாயும் அதற்கேற்றால்போல் G. O.-வை விரிவுபடுத்த வேணுமாயும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டு அதன் நகல்கள் எல்லாக் கல்வி அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு தாலூகா யூனியன்களும் இத்தகைய தீர்மானங்களை நிறைவேற்றி சம்மந்தப்பட்ட எல்லாக் கல்வி அதிகாரிகளுக்கும் கவர்ன்மெண்டாருக்கும் அனுப்புவதுடன் பாலர் கல்வியின் வாயிலாக இது விஷயம் கிளர்ச்சி செய்யவேணுமாயும் கேட்டுக்கொள்கிறேன்.

சில ஜில்லாக்களில் அநேகர் ஜில்லாச் சங்கம் அமைக்க சிரத்தை எடுத்து வேலை செய்வதாயும் ஆரம்ப ஆசிரியன் பாலர் கல்வி வாயிலாகவும் தினசரி பத்திரிகை வாயிலாகவும் அறிகிறேன். தயவுசெய்து இது விபரத்திற்கும் அவர்கள் செய்துகொண்ட முயற்சிக்கும் எனக்குத் தகவல் கொடுக்கவேணுமாயும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இதைத் தீர யோஜித்து இவற்றைக் கவனிக்கவேணுமாயும் கேட்டுக்கொள்கிறேன்.

ஜில்லா யூனியன் தேவை என்பதற்கு முக்கிய காரணங்கள் G. O. L. 1. M. 416 (4-2-39) பிரகாரம் ஆரம்ப ஆசிரியர்கள் தாலூகா யூனியன்களை ஸ்தாபித்துக்கொள்ளலாம் என்று ஏற்பட்டு இருக்கிறது. இந்த அனுகூலத்தைப் பயன்படுத்திக்கொண்டு அநேக தாலூக்காக்களிலும் (மதுரை ஜில்லாவிலுள்ள எல்லாத் தாலூக்காக்களிலும் தாலூகா யூனியன் ஏற்பட்டுவிட்டன). இப்பொழுது ஜில்லா யூனியன்

என்ற மத்யசபை தாலூக்கா யூனியன்களை வழிகாட்டவும் அத்தாலூகா யூனியன்களின் சார்பாக கல்வி இலாகா அதிகாரிகளையும் இதர உத்தியோகஸ்தர்களையும் பேட்டிகண்டு குறைகளை நேரில் தெரிவிக்கவும் ஓர் சபை தேவையென இப்பொழுது ஒவ்வொரு தாலூகா சங்கங்களும் கருதுகின்றன.

எல்லாத் தாலூக்கா யூனியன்களும் அடிக்கடி கூடி ஒன்றுக்கொன்று கலந்து பேசவும் பொதுவான விஷயங்களை யோஜிக்கவும் இத்தகைய யூனியன் சங்கம் இடமளிக்கிறது.

இப்பொழுது போர்டு பாடசாலைகள் சம்பந்தப்பட்டவரையில் ஜில்லா பூராவுக்கும் ஒரே ஜில்லா போர்டு சபை கண்காணித்து வருகிறது. பல தாலூகா யூனியன்கள் சிற்சில சமயங்களில் ஒரே தீர்மானத்தை ஜில்லா போர்டாருக்கோ கவர்ண்மெண்டாருக்கோ அனுப்ப நேரிடுகிறது. ஜில்லா யூனியன் அமைக்கப்பட்டால் இவைகளைக் கவனித்துக்கொள்ளும் இதனால் தாலூகா யூனியன்களின் அதிகார எல்லையை இது மீறாது. தாலூகா யூனியன்களின் வேலைகளை தடையும் செய்யாது. தாலூகா யூனியன்களின் விஸ்தீரணம் குறுகிய எல்லையில் இருப்பதாலும் ஜில்லா யூனியனுக்குச் சற்று விரிவான விஸ்தீரணம் இருப்பதால் ஆசிரியர் முன்னேற்றத்திற்கு அனுகூலமாக சஞ்சிகை நடத்த ஜில்லாச் சங்க அமைப்பால் ஆசிரியர்களுக்கு அநேக நன்மைகள் உண்டு.

---

## குறிப்பு

தென்னிந்திய ரெயில்வே கம்பெனியாரிடமிருந்து சென்னையிலிருந்து மகாபலி புரத்துக்கு ஒரே நாளில் போய் வரக்கூடிய உல்லாச சுற்றுப் பிரயாணத்துக்கு வேண்டிய வசதிகளைக் குறித்தும், அங்காங்குள்ள விசேஷங்களைக் குறித்தும் சில படங்களடங்கிய பத்திரிகைகளை வரப் பெற்றோம். இந்த ஒரு நாள் சுற்றுப் பிரயாணம், மாணவர்களுக்கு மட்டுமல்லாமல், பெரிய கம்பெனியில் உள்ள உத்தியோகஸ்தர்களுக்கும், வியாபாரிகள். முதலிய இதரர்களுக்கும் சௌகரியமாயிருக்கும்படி ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

இதைப் பற்றிய விவரங்களுக்கு சீப் கமர்ஷியல் சூப்பரிண்டெண்டெண்டு, S. I. R., அவர்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

# பத்திராதிபர் குறிப்பு

—

ஸர்விஸ் கண்டிஷன்கள்

மார்ச் மாதம் நமது 'தென்னிந்திய ஆசிரியன்' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கும் ஸர்விஸ் கண்டிஷன் சம்பந்தமான கட்டுரைகளை ஒவ்வொரு ஆசிரியரும் படிக்க வேண்டியது அவசியம். அவற்றுள் சிலோன் கல்வி மந்திரியால் தயாரிக்கப்பட்டு, சிலோன் ஆசிரிய சங்கத்தின் அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் யாதாஸ்து முக்கியமாக கவனிக்கத் தகுந்தது.

ஒவ்வொரு வருஷமும் மாகாண கல்வி மகாநாட்டில் இது சம்பந்தமான அனேக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அவைகளை யொட்டி அதிகாரிகள் தகுந்த முறைகளை இது காறும் அனுஷ்டிக்கவில்லை. ஆசிரியர்களின் உத்தியோக நிலைமைக்கும் கல்வியின் அபிவிருத்திக்கும் நெருங்கிய சம்பந்தம் உள்ளது. ஆகையால் கல்வி இலாகாவுக்குப் பொறுப்பாளிகளாயுள்ளவர்கள் பாடசாலைகளில் உத்தியோக நிலைமைகளைப்பற்றி அதிக சிரத்தையுடன் கவனிக்கவேண்டும்.

கய்வியைப் பரவச் செய்வதற்கு தற்காலத்திய சர்க்கார் உதவிமுறை இந்தியாவிலுள்ள பொருள் நிலைமைக்கு ஒருவாறு ஏற்றதென்று வைத்துக்கொள்வோம். அதை முற்றிலும் பலனுடையதாகச் செய்வதற்கு அதிகாரிகள் அதற்கு வேண்டிய நிபந்தனைகளையும் அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். ஆரம்ப, செகண்டரி, காலேஜ் கல்வி அதிருப்திகரமாக இருப்பதற்குக் காரணம் பொறுப்பாளிகளான கல்வி அதிகாரிகள் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தாமலிருப்பதே என்பது தவறல்ல. உதவி பெறும் பள்ளிக்கூடங்களுக்கு மானேஜர்கள்தான் முழுப் பொறுப்பாளிகளென்றும்; அவற்றின் நிர்வாகத்தில் சர்க்கார் தலையிடுவது சரியல்லவென்றும் நினைப்பது சரியாகாது.

பொது ஜனக் கல்விக்காக அனுசரிக்கவேண்டிய விதிகள் இன்னதென்றும், ஏஜெண்டுகள் எவ்வித மிருந்தபோதிலும், கல்வி விஷயத்தில் சர்க்காரின் பொறுப்பு எப்படிப் பட்டதென்

பதையும் சிலோன் கல்வி மந்திரி மிகவும் வியக்தமாக எடுத்துக் காட்டி இருக்கிறார். அவருடைய கொள்கைகள் எல்லோராலும் பொதுவாக ஒப்புக்கொள்ளக் கூடியதே.

சர்க்கார் தலையிடுவது மானேஜர்களின் உரிமைகளை அடக்குவதாகாதா என்று சிலர் கேட்கலாம். பொது ஜனக் கல்வி சம்பந்தமாக சர்க்கார் தங்களுடைய பொறுப்பை விட்டுவிடக் கூடாது, என்றும், அவர்களுக்குக் கல்வி அபிவிருத்தியின் பொருட்டு இஷ்டமான திட்டங்கள் ஏற்படுத்த அதிகாரமுண்டென்பதையும் அவ்வாறு கேட்பவர்கள் ஞாபகத்தில் வைக்கவேண்டும். சர்க்கார் ஏற்படுத்தும் விதிகள் வேடிக்கைக்காகவல்ல. பொது ஜனக் கல்விக்கு அத்யாவசியமானவைகளாகும்.

சில மாதங்களுக்குமுன் யூனியனைச் சேர்ந்த கோஷ்டியார் மாகாணக்கல்வி அதிகாரியிடம் சென்றபொழுது ஆசிரியர்களின் உத்தியோகத்திற்கு ஆதரவாயிருக்கும்படி ஒப்பந்தத்தை மாற்றி அமைக்கும்படி வற்புறுத்தினார்கள். அக்கல்வி அதிகாரியும் இப்பொழுது உள்ள ஒப்பந்தம் சரியாக இல்லை என்று தங்களுடைய அறிக்கையில் ஒப்புக்கொண்டிருக்கிறார். சட்ட மூலமாக திட்டங்கள் ஏற்படுத்த அசக்தராயிருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். இதர மாகாணங்களில் ஒரு மத்யஸ்த சபை ஏற்படுத்த முயற்சி செய்யப்பட்டு வருகிறது. அதிகாரிகளும் தேசீய வாதிகளும் மேலுக்குமட்டும் ஆசிரியர்களின் பரிதாப நிலைமையைப் பற்றி அனுதாபப்படுவதாகக் கூறுகிறார்கள். காரியத்தில் தயங்குவதற்குப் பணமில்லாத தோஷம் என்று அடிக்கடி சொல்லுகிறார்கள்.

சம்பளவெட்டு, வேலை நீக்கம் முதலியவைகளுக்கான ஸெர்விஸ்கண்டிஷன்களை ஏற்படுத்தத் தயங்குவதேன் என்று நாம் கேட்பது தவறாகுமா? இச் சீர்திருத்தத்தால் பணச்செலவுண்டா? இவைகள், ஆளுக்கு ஆள், மானேஜ்மெண்டுக்கு மானேஜ்மெண்டு பள்ளிக்கூடத்துக்குப் பள்ளிக்கூடம் மாறுபாடாக இருக்கக் கூடாது.

அனுவசியமாக மானேஜ்மெண்டில் தலையிடும்படி டிபார்ட்மெண்டை இவ்யூனியன் கட்டாயப்படுத்தவில்லை. ஆனால் பொது ஜனக் கல்வியில் ஈடுபடுகிறவர்கள் அனுவசியமான தொந்தரவில்லாமலும், சௌகரியமாயும் நியாயமாயுமுள்ள உத்தியோக முறைகளை அனுபவிக்கவும் தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று

அது வற்புறுத்துவது நியாயமே. இவ்வாறு நடப்பதற்கு நிர்ணய மான விதிகளை சர்க்கார் ஏற்படுத்தவும், அநீதியான விஷயங்களை சர்க்காரே கவனிக்கவும் வேண்டும். பள்ளிக்கூடங்களை அங்கீக ரிக்கவும், அதற்கு உதவியளிக்கவும் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனை களோடு பொது விதிகளைச் சேர்த்துவிட்டால் மானேஜ்மெண்டு கள் புகார் செய்யக் காரணமிராது. அதிகாரம் செலுத்த சந் தர்ப்பம் ஏற்பட்டிருப்பதாக மானேஜ்மெண்டார் சாதாரணமாக நினைப்பதில்லை. உண்மையில் பொதுஜன சேவைக்குச் சந்தர்ப் பம் கிடைத்ததாக எண்ணியே மானேஜ்மெண்டார் பொதுஜனக் கல்வியில் சிரத்தை காட்டுகிறார்கள் என்று நாம் நம்பலாம்.

சிலோன் கல்வி மந்திரியால் தயாரிக்கப்பட்ட யாதாஸ்து ஆசிரியர்களும் மனிதர்கள் என்பதை மறக்கவில்லை. அது சரி யான மார்க்கத்தைக் காண்பிக்கிறது. நமது ராஜதானியில் கல் விச் சீர்த்திருத்த ஆலோசனை செய்யும்பொழுது சற்றேறக் குறைய யாதாஸ்திலுள்ள விஷயங்களை அனுசரித்து தகுந்த முறைகளை அனுஷ்டிக்கும்படி டிபார்ட்மெண்டாரைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

உதவி பெறும் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்கள் 'தென் னிந்திய ஆசிரியன்' (South Indian Teacher) என்ற நமது ஆங் கிலப் பத்திரிகையிலுள்ள ஸர்விஸ் கட்டுரைகளை மிகவும் கவனத் தோடு படித்து, சித்தூர் ஜில்லா ரிஷிவாலி என்ற இடத்தில் மே மாதத்தில் நடக்கப்போகும் மாகாணக் கல்வி மகாநாட்டில் சர்ச்சை செய்வதற்குத் தயாராக இருப்பார்கள் என நாம் நம்பு கிறோம்.

# THE SOUTH INDIA TEACHERS' UNION

520, High Road,
Triplicane,
Madras,
5-10-'40.

From

SRI. T. P. SRINIVASAVARDAN, B.A., L.T.,
Honorary Secretary, South India Teachers' Union.

To

THE DIRECTOR OF PUBLIC INSTRUCTION,
Old College, Nungambakkam, Madras.

Sir,

As stated in my letter dated 2nd July 1940, when I forwarded the resolutions passed at the 31st Provincial Educational Conference held at Ambasamudram in May 1940, I am herewith forwarding a brief memorandum on some of the more important resolutions adopted at the Conference for your earnest and sympathetic consideration.

Resolution 6.—Provident fund for teachers in aided schools.

This resolution was passed at the conference held in Madras in May 1939 and in our letter dated 15th March 1940 your attention was invited to this. You were kind enough to point out to us the difficulty in enhancing the rate of interest or in giving a special rate of interest to the provident fund deposits of teachers. The following table will show how the rate of interest for deposits in the Post Office Savings Bank has decreased:

| YEAR. | RATE OF INTEREST. |
|---|---|
| From 1-4-1924 to 31-10-1933. | .. 3 per cent. |
| From 1-11-1933 to 30-6-1936 | .. 2½ " |
| From 1-7-1936 to November 1938 | .. 2 " |
| The prevailing rate | .. 1½ " |

May I request you once again to persuade the Government to comply with our request that he contribution by Government be raised from one-third to one-half of the amount to the credit of the subscriber at the time of the closure of his account. The increase suggested in the resolution will be of great financial help to teachers in aided schools on the eve of their retirement while it will cause no serious strain on the resources of the Government. It may be pointed out that not more than a sum of Rs. 25,000 a year will be required to meet this extra expenditure on the contributions.

As is allowed in the case of teachers under Local Bodies and Municipalities, at the request in writing of any subscriber any portion or the whole of his subscription with interest thereon may be invested by the management in a policy of life insurance in such office, for such amount and for such terms as may be mutually agreed upon in writing between such subscriber and management. If you should feel that a general permission will be a great strain on the administrative section, it is sug-

gested that the Government be moved to extend the benefit of Postal Insurance to teachers in aided schools as a special case.

Resolution 4. Educational Policy.

This resolution deals with the educational policy of the Government. It emphasises the need for the formulation of a new educational policy in our presidency. Educational policy for private institutions is quite different from that for Government institutions. Equipment grants to private institutions have been considerably reduced. The standard of education will certainly suffer by this reduction. To improve it the Government should give financial help.

Resolution 5. Board of Education.

It deals with the necessity for the creation of a Provincial Advisory Board of Education consisting of the representatives of the Government, the Universities, the Managements and the South India Teachers' Union to advise on matters, educational and professional. Such a body is necessary to give expert advice to Government on educational questions.

Resolution 7. Local Body employees.

The resolution is self-explanatory and it refers to teachers employed by Local Bodies and Municipalities. In the case of those retrenched and re-entertained, previous service is not taken into account. It is requested that teachers who are re-entertained may be started on the same salaries as they would have got if they had not been retrenched.

Resolution 12.—Admission to L.T. Course.

This resolution requests the Government to admit to the L.T. Course Secondary Grade Trained Teachers who took their B.A. by private study without any fee being demanded. At present a fee of Rs. 160 is demanded from them. Such teachers who take their B.A. by private study are really not financially well off and they deserve encouragement for their enthusiasm and eagerness to become more efficient.

Resolution 11.—Service conditions.

An appeal has been made to you to amend the contract (appendix 28 M.E.R.) between the teachers and the managers in the aided schools. Once again the South India Teachers' Union appeals to you to give your best attention to the recommendations of the South India Teachers' Union regarding the lines on which the contract may be amended. The contract has been introduced to ensure security of tenure of service of teachers in aided schools. In actual practice it has been found that it does not go far enough to give the necessary protection. The Union is distinctly aware that the department is already anxious to remove friction between the teacher and the management, and to do its best towards the improvement of the lot of teachers. The Union in its letter of 15th March 1940 has suggested certain lines on which the contract has to be amended. The points which the Union would desire to be incorporated in this connection are:—

1. The adoption of minimum scale of salaries for teachers of different grades as a condition of recognition, the scales being those in local boards; (2) the contract should specify the salary and the scale of the teacher; (3) any cut or revision of the scale involving reduction be permitted only with the approval of the Director of Public Instruction; (4) the fundamental rules relating to vacation departments be made applicable to aided institutions; (5) the termination of the services of a teacher by a management be for specific reasons such as, moral turpitude, inefficiency, phy-

sical incapacity, etc., and that such termination be subject to the approval of the Director of Public Instruction; (6) the management need not accept the resignation of a teacher unless he gives three months' notice at the end of the academic year and (7) the right of the management to suspend or dismiss a teacher with the approval of the Director of Public Instruction be recognised and that the teacher be given the right of appeal to a Board of Arbitration.

Resolutions 8, 9, 13, 14 and 18 relate to elementary education and elementary school teachers pleading for (1) free universal and compulsory elementary education by amending the present Elementary Education Act; (ii) an enquiry into the working of the elementary education policy and a review of the G.O.'S., rules and departmental proceedings issued in pursuance of that policy; (iii) a revision of the grant rules so as to remove their complexity and assure managements and teachers alike of their quota of grant; (iv) revision of the rule regarding working days and hours with a view to lessen the strain on pupils of tender age; (v) the fixing up of service conditions and the enforcement of the same and a modification of the service register to ensure security of tenure and to provide for termination on specific grounds; and (vi) the extension to elementary teachers of the privilege granted to collegiate and secondary school teachers in respect of the G. O. No. 1280.

The South India Teachers' Union agrees with the Government and the Department in the diagnosis of the twin evils of stagnation and wastage which block the progress of elementary education in this presidency. It is also anxious, along with the department to check any increase in the number of uneconomic and inefficient schools. It agrees with the Department that a better set of elementary teachers and an effective inspecting staff are required to improve the efficiency of schools so as to make schools line up with the national needs.

## THE GOAL OF ELEMENTARY EDUCATION.

Notwithstanding the report of the sub-committee of the economic council and notwithstanding the enunciation of the goal of the Government policy as the literacy of the school child, the South India Teachers' Union should emphasise that a revision of the goal of elementary education and the introduction of free, compulsory and universal elementary education have become an urgent necessity.

## WORKING OF THE ELEMENTARY EDUCATION POLICY.

The working of the present elementary education policy during the past three years has led to deep discontent on the part of all concerned in elementary education. While increase in number of pupils has been achieved, the Union notes with regret that schools have been closed and that steps have not been taken to start schools in school-less areas. Managements and teachers have not had and cannot have the full advantage of increased scale grants awarded by the Government. Service conditions of teachers, though they have been attempted to be stabilised, have unfortunately caused deep discontent as was evidenced by the violation of the educational rules by the aided elementary school teachers in Malabar. All these call for a review of the whole aim and policy in regard to elementary education.

## STRAIN DUE TO INCREASED WORKING DAYS AND HOURS

Discontent is much in evidence against the working of the rules and proceedings which have been from time to time issued by the Department. In particular. the raising of the working days from 200 to 220 in a year, not to speak of the increase of the working hours of a school day from 4 to 6 hours is an undue strain on children and teachers. It is feared that the continuance of this rule is bound to affect adversely the health of pupils in elementary schools. It is suggested that the working days be fixed at 200.

## SUBMISSION OF RETURNS.

The reports and returns that are required by the inspecting staff interfere with the normal work of headmasters and teachers. The Union agrees with the Department in thinking that teachers must have acquaintance with the preparation of returns and reports, but it cannot afford to overlook the difficulties in this connection. It is suggested that an extra teacher to every complete lower elementary school with five standards be given and that such teachers be entitled to receive grant. Moreover it is requested that the proceedings of the Department of Education, whether of a provincial nature or of a district nature, be made available in the form of a departmental bulletin to elementary schools and teachers' organisations.

## GRANT RULES.

The grant rules relating to elementary education as embodied in G. O. No. 1903, Education, dated 21st August 1930 are very complicated in character. The assessed grant is based upon a number of factors like, (i) pupil attendance, (ii) teachers' qualifications, (iii) teacher quotient, (iv) number of standards, (v) number of sections and strength, (vi) weightage, (vii) stagnation and (viii) under-aged pupils. The very calculation of this grant is giving a lot of trouble. The figure that has been arrived at is likely to be altered, since the assigned grant finally fixed by the District Educational Officer, with the modification by the Taluk Education Committee, by way of increase or decrease, may happen to be less than assessed grants earned by schools. Even this assigned grant cannot be counted upon by managements because of the pro-rata cut year after year on account of the absence of the necessary budgetary provision for each district. Thus the management and teachers who work for a whole year in expectation of getting the grant seldom have the chance of getting it in full. Because the managements do not get the assessed grant and because the pay of the teacher is linked to the sanctioned grant, teachers do not get the salary of even 85 per cent of the scale grant. Very often inefficient schools which get statutory cuts suffer a good deal and sometimes have to refund what they have already received while efficient schools which get the par grant or an increase also have to lose on account of the pro-rata cuts. Thus both efficient and inefficient schools suffer alike through the cuts. It will therefore be seen how the grant policy is making the position of both the management and the teacher financially insecure. Therefore it is necessary that the very many conditions relating to assessment of grants should be simplified and a grant formula based on the per pupil cost of the school be devised. In addition to this grant based on per pupil cost a special grant (management grant) towards the management of the school taking into consideration the fee income, if any, and the expenditure by the management on rent, equipment, etc. should be granted to the management. The need for revising the grant rules is urgent. On the one hand it is necessary to see that the tecachers get their assessed salary and on the other the management should also be shown some consideration for the responsible work of management it had undertaken. The Union should thus suggest two kinds of grant—(1) grants to managements for their assisting the state in maintaining schools under rules and (2) teaching grants to teachers. The Union feels that neither managements nor teachers should have cause to complain if separate cuts are imposed on managements and teachers for valid reasons. This would both be equitable and just and remove occasions for any friction between the managing agency and teachers. In the case of public schools receiving subsidies, it is essential that the Government should bear in mind the same principles as are applicable to aided schools and it is for the Government to consider the question of the pooling

of all available resources for elementary education in a district so that all schools may be placed on the same footing. A suggestion of this nature was made by the present Director of Public Instruction in his report on elementary education as a special officer.

## SECURITY CONDITIONS.

The Union is thankful to the Department for what it has done to stabilise the service conditions of teachers. The introduction of service register, the increase of scale grant, the fixing of rules relating to direct payment to teachers in the case of defaulting managements, the introduction of the Government Provident Fund, the payment of quarterly grants to managements and the provision for three months' notice on either side to terminate the services of teachers are sure to improve the condition of teachers. But as has already been pointed out the benefit of the increase of the scale grant is not fully enjoyed by teachers and they suffer for no fault of theirs. Moreover, the right of the management to impose special conditions linking teacher's pay and tenure to the actual sanctioned grant lends itself to abuses which ultimately react on the security of tenure. The only way in which teacher tenure could be guaranteed is for the Government to fix a minimum scale of salary for adoption by aided school management and to see that teachers' services are terminated for reasons specified in the service register.

In conclusion, the Union feels that the department should take steps to amend the Madras Elementary Education Act of 1920 as modified in 1932, 1934, 1935 and 1939; to revise the G. O. No. 2611, (Elementary Education Policy), dated 8th December 1936, G. O. No. 430, (Service Register), of September 1938 and G. O No. 1903, (Recognition and Aid), dated 21st August 1939. An enquiry and revision would go a great way to allaying the present discontent which is felt by managements, elementary teachers and teachers' organisations.

The office of the Union has been getting letters from different parts of the Presidency and members are eager to know what action the Director of Public Instruction proposes to take on the resolutions passed at the Conference. I shall feel very thankful if you would be pleased to take into consideration the points raised in the resolutions and indicate the measures which it may be possible for you to adopt in regard to them.

I have the honour to be,
Sir,
Your most obedient servant,
T. P. SRINIVASAVARADAN.